பதிவு எண் 2041 | கதர் வாழ்க! | தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா, வெளி நாடு 1½ அணா






| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1–12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. | 8. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. | 2. |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் | |

ஆசிரியர்

[illegible]

மாலை 3 | ஈரோடு, பிரபவ வரு மார்கழி மீ 3வ (18—12—27) ஞாயிற்றுக்கிழமை | மலர் 34.



## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும் தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ்நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

### "குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

## திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M, V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

# மின்சார ரசம்.

## சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

**பத்தியமில்லை!** மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம், மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்றதென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

எச்சரிக்கை:- ரிஜிஸ்டிரான டிரேட்மார்க்

**அநுபானமில்லை!** மின்சார ரசம்.

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! கேட்லாக் இனாம்.
உங்களை ஆச்சரியமுறச் செய்யும்! இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மேசர்ஸ். T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.



# மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd.

## ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷெ கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகாமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.



## நார்பட்டு புடவைகள்.

தினப்படி உபயோகப்படுத்தலாம்.

சாயத்திற்கு காரண்டி சரிகை சுருங்காது.

2½ அகலம் 16 முழம் நீளம் உடல் மஞ்சள் கருபபுக்கோடு, வாழப்பூ, ஊசிவர்ணம், தண்டவாளம் முதலிய பல ரகங்கள் உண்டு. இருகரை சிகப்பும் ஒரு கரை மஞ்சளும் உண்டு. சேலை 1-க்கு 11—12—0.

சரிகையினால் இருகரைகளிலும் ரோஜா, கொடி, கிளாவர், இஸ்பேட், முதலிய பேட்களும், முந்தியில் சரிகையும், புளு, ரோஸ், ஊதா, சாக்லெட் முதலிய பலவித கலர்கள் உண்டு. 2½ அகலம் 16 முழம் சேலை 1-க்கு ரூ. 16-8-0.

N. B, மேல்கண்ட சேலைகள் தினப்படி துவைக்கலாம்.

வி பி. தபால் பாக்கிங் செலவு வேறு.

முன்பணம் அல்லது அட்வான்சு அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை, வியாபாரிகளுக்கும் கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர், ஸ்ரீ சௌடாம்பிகா ஜவுளி வர்த்தகசாலை,
உறையூர் P. O., திருச்சி.


சிங்கப்பூரில்

## 'குடி அரசு"

கிடைக்கும் இடம்:—
பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் ஏஜென்சி,
நெ. 6 பேட்டரி ரோட்டு,
சிங்கப்பூர்.


அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

| | |
|---|---|
| 20 சாம்பிள் பாக்கெட் | ரூ. 2—0—0 |
| 10 ,, ,, | ரூ. 1—4—0 |
| நாட்டுக் காய்கறி 20 | ரூ. 2—8—0 |

ச. கோ. இ. காதர்மீரா சாயபு;
ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.



## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று



அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.


தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதாராஸ்.



இனாம்! இனாம்!!

## டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முந்துங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

# குரு, ராஜா, ஸ்த்ரீ, கொடி ஆகிய இவைகள் பக்கத்திலுள்ளவர்களைப் பற்றிப்படரும்.

(கைவல்லிய சாமியார் எழுதுவது.)

குரு, ராஜா, ஸ்த்ரீ, கொடி ஆகிய இவர்கள் தம் பக்கத்திலுள்ளவர்களையே பற்றிப் படருமென்பது அநேக காலத்திற்கு முன்னே ஏற்பட்ட பழஞ்சொல். அனுபோகங்களை ஒட்டியே பழஞ்சொற்கள் உண்டாயிருக்கின்றன- பழஞ்சொல்லைக் கவனிக்கையில்;பக்கத்திலிருப்பவரைப் பற்றி பலரை வருத்தப்படுத்துவது அநேக மகாத்துமாக்களுக்கு வழக்கமாயிருக்கிறது. அதுபோலவே மகாத்மா காந்தியும் பக்கத்திலிருப்பவர்களைப் பற்றிப் படர்ந்துகொண்டிருக்கிறார் என்பதை தென் தேசத்து யாத்திரை தெளிவாய் காட்டுகிறது. மகாத்மா காந்தி அவர்கள் தென்தேச யாத்திரையின் பிரசங்கத்தில் வருணாசிரமம் என்பதை சொல்லாத யிடமும், அதற்கு வியாக்யானம் பண்ணாத பாகமும், அளவற்றவர்களுக்கு அர்த்தமாகாத வார்க்கியங்களும் இல்லாத இடமேயில்லை. 'கொடிய பாம்பும் சாகப்படாது அதை அடிக்கும் கோலும் குழைதல் கூடாது' என்பது போன்ற மகாத்மா பேச்சு வைதீகர்களையும் திருப்தி செய்தபாடில்லை; தமிழ் கூட்டத்திற்கும் வருத்தத்தை உண்டுபண்ணாமலிருக்கவில்லை. ஒரு வருடத்தில் சுயராஜ்யம் வருமென்று அவர் சொன்ன வார்த்தை இருபத்தொன்றாம் நூற்றாண்டில்கூட வராமல் தாண்டிச்செல்லும்போல இருக்கிறது. காங்கிரஸ் கூடின பந்தலில் இதுவரையிலும் ஆசார சீர்திருத்தசபை கூடினதாகக் கண்டோம். மகாத்மாவின் தென்தேச யாத்திரையின் பலனாக காங்கிரஸ் பந்தலில் வருணாசிரம மகாநாடு கூடுவதாக இந்த வருடம் கேள்விப்படுகிறோம். இதனால்தான் இந்த வருடத்து காங்கிரஸ் விசேஷமானதென்று பாப்பாரப் பத்திரிகைகள் சொல்லுகின்றனபோலும். இந்த காங்கிரஸ் பந்தலில் வருணாசிரம மகாநாடுகூட்ட ஆலோசித்ததொன்றே போதாதா இக்காங்கிரஸ் பாப்பார்கள் காங்கிரஸ் என்பதற்கு ஆதாரம்.

நாம் வசிக்கும் இந்த உலகமானது வளர்ச்சியினாலும், கூடியிருக்கும் நூதன சந்தர்ப்பங்களினாலும், எவ்வெப்போது புதிதாக அணிவகுக்கப்பட வேண்டியிருக்கிறதோ, அவ்வப்போதெல்லாம் காரியத்திற்கு வேண்டிய சக்தி பொருந்திய ஒரு அலை கிளம்புகிறது. மனிதனானவன் மதசம்பந்தம் உலகப்பற்று என்று சொல்லப்படுகிற இரண்டுவிதமான வாழ்க்கைகளை உடையவனாயிருக்கிறபடியால், இந்த இரண்டு விதமான வாழக்கைகளையும் அடிக்கடி அணிவகுக்க வேண்டியதற்காக அலைகள் கிளம்புகின்றன. தர்மம் நசித்து அதர்மம் மேலிடும் போதெல்லாம் மனித வர்க்கத்தைக் காப்பாற்றுவதற்காக நான் அவதரிக்கிறேன் என்று ஸ்ரீ கிருஷ்ணன் கூறியதாகச் சொல்வதுபோல கிளம்பின அலையை நேர்வழியில் நடத்திச் செல்ல சக்தியுடையவரென்று இதுவரை மகாத்மாவை நம்பியிருந்தோம். உலகப்பற்று அதாவது லௌகீக சம்பந்தமான கொள்கைகள் எல்லாம் பூரண அதிகாரமும் பெருமையும் அடைந்திருக்கும் தற்காலத்தில்,மனிதனானவன் வரவர ஜடப்பொருள்களுக்குக் கட்டுப்பட்டவனாகி தன்னுடைய சத்தியத்தை இழந்து பணம் சம்பாதிக்கும் இயந்திரமாகமாத்திரம் ஆகிவிடக்கூடியநிலைமையில்இருக்கும் தற்காலத்தில்,சீர்திருத்தம் அவசியமென்பதையும் உணர்ந்தோம். ஆதலால் உலக விவகாரங்களின் சேர்க்கையில் மிககொடுமையானதான தன்னலமாகியமேகக்கூட்டங்களை விரட்டக்கூடிய சக்திபொருந்திய தொனி மகாத்மா வாயினின்றும் முன் கிளம்பினதையும் கேட்டோம். கொஞ்சமேனும் குற்றங்குறைவுக்கிடமில்லாததும் மிகவும் கண்டிப்பானதுமான பரிசுத்தத்தன்மை இவருக்கு உண்டு என்று மனப்பூர்வமாய் நம்பினோம். அன்றியும் தேசபக்தியாகிய விளக்கு நம்முள் எரியத் தொடங்கிய காலத்தில் நம்முள் இருக்கும் அதிக உத்தம அம்சங்கள் ஜோதி பெற்றுத்திகழுமென்ற உயர்ந்த ஆசைகள் கொண்டிருந்தோம். பல நூற்றாண்டுகளாக நம்மிடையே வந்து சேர்ந்துள்ளதான பிழைகளெல்லாம் நம்மை விட்டோடிப் போகுமென்றும், நமது நிராசையில் ஆசையூற்றுத்தோன்றுமென்றும்,நம் எதிர்காலத்தின் நிராசை வெளியில் நம் ஊக்க விழிப்புகளால் ஒருபாதை புலப்படுமென்றும், நம்முடைய ஆண்மையை நசுக்கிப் பழிப்புக்கிட மாக்கிய குரூரமான ஜாதி வருணாசிரமங்களினின்றும் பரஸ்பர அன்பினால் விடுபட்டு சகோதரத்துவமடைவோமென்றும் நம்பியிருந்தோம். இப்பொழுது அவையனைத்தும் விழலுக்கிறைத்த நீர் போலாகி வருவதையும் காண்கிறோம். தேசபக்தி விளக்கு கொளுத்துண்டது என்று சொல்லி, அதில் தன்னலமும் பொய்யும் மோசடியும் பொன்னில் மாற்றுக் கலப்பது போல் கலந்து, அது விலையாவதற்கு மகாத்மாவை துபாஷியாக ஏற்படுத்திக்கொண்ட தென்னாட்டுப் பார்ப்பார்கள் சாமார்த்தியமும் நம் முன் நிற்கிறது. இது பரம்பரையாக பார்ப்பனர்களுக்கும் குருவென்று சொல்லுகிறவர்களுக்குமுள்ள குணமென்பதை இனி மேலாவது தெரிந்து கொள்ளுங்கள். "லோக குரு" வெனப் பேருள்ள சங்கராச்சாரியின் தெற்கிலிருந்து வந்த சீர்திருத்தமும் பிராமணர்களுக்கு மாத்திரம் அனுகூலமாயிற்று. மற்ற இந்திய மகாஜனங்களுக்கோ அவர்கள் முன் எப்போதும் பார்த்திராத விலங்குகளை உண்டாக்கிவிட்டது" என்று சுவாமி விவேகாநந்தரும் சொன்னார்.

ஹரி என்னும் அக்ஷரம் சொல்லிக்கொடுத்தவர்களிலிருந்து அரி என்னும் கடவுளிடம் சேர்ப்பவர்கள் வரையிலுமுள்ள குருவென்கிறவர்களெல்லாம் பக்கத்திலிருப்பவர்களைப்பற்றிப் படர்ந்தே இருக்கிறார்கள். பழய தமிழ் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் சில பையன்களைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளுவார்கள். அந்த பையன்கள் உபாத்தியாயர் தூக்கத்திற்கு முதுகு சுரண்டுவதும், வேர்க்குருவு கிள்ளுவதும், உபாத்தியார் வீட்டுக்கு வேண்டிய சாமான் வாங்கிக்கொடுப்பதும், காலையில் பையன்கள் கொண்டுவரும் வெற்றிலைபாக்கு, வெள்ளிக்கிழமை கொண்டுவரும் உப்பு மிளகாய் புளி, சனிக்கிழமை கொண்டுவரும் எண்ணெ முதலியவைகளை வீட்டில்சேர்க்கவும், வேலை செய்வார்கள். அதனால் உபாத்தியாயருக்கும் அந்த பையன்களுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டாகிறது.இவர்கட்கு ஓலைச்சட்டம் எழுதுவதில்மன்னிப்பும்,பள்ளிக்குவராத பையன்களைக்கூட்டிக்கொண்டு வருவதிலும் அவர்கள்விசாரணையிலும் பள்ளியின் சச்சரவில் சாட்சி சொல்லுவதிலும் அதிகாரமதிகம். உபாத்தியாயர் இல்லாத சமயம் சட்டாம்பிள்ளைத்தனமும் அவனுடையதே. இந்தக்காலத்தும் உபாத்தியாயருக்கு வேண்டியவனாகவோ பந்துவாகவோ சிபார்சுடையவனாகவோ இருந்தால் கிளாஸ் மார்க்கு எப்படி இருந்தாலும் சர்க்கார் பரீட்சைக்கு அனுப்புவதற்கோ மேல் கிளாஸ் மாற்றுவதற்கோ ஆட்சேபனையில்லை. சங்கராச்சாரியின் அத்தனை புத்தியும் அவர் தனது பக்கத்திலிருப்பவர்கட்கே உபயோகப்படுகிறது, இப்பொழுதும் அவர் வாங்கும் அத்தனை பணமும் பக்கத்திலிருக்கும் பாப்பாருக்கே உபயோகப்படுகிறது, துரோணாச்சாரி சந்திரவம்சத்து ராஜ குரு.இவர்பக்கத்திலிருக்கும் மகன், அஸ்பத்தாமா, சிஷியன், அர்ச்சுனன் இவர்கட்காக மகா யோக்யனும் அதிமேதாவியும் உத்தமனும் குருபக்தியுடையவனும் சத்தியவானுமான ஏகலைவனின் பெருவிரலை தக்ஷிணைக்காக வாங்கினார். காசிபர் ரிஷிக்கும் சந்திரவம்சத்து ராஜாக்களுக்களுக்கும் அதிக சம்மந்தம் அதன் நிமித்தம் பரிசித்து சர்ப்பத்தால் கடிபட்டுவதைத்தெரிந்து பரிச்சித்துவைக் காப்பாற்ற வந்த காசிபரிஷி கார்க்கோடகனின் உபசாரணைவாக்குக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு திரும்பினதும், தன் குருவான சூரியனின் மகன் சுக்கிரீவனைக் காப்பாற்ற அனுமான் தன் ராஜாவான வாலியைக்கொல்ல ஏதுவானதும், அர்ச்சுனன் குருவான கிருஷ்ணன் அர்ச்சுனனுக்காக அநேக பெண்களைக் கெடுத்து அர்ச்சுனனுக்குப் பெண்ணாக்கி கடைசியில் கீதையும் உபதேசித்ததும், ஒரு கோட்டுக்கலைமுனி இரண்டு தாசிகளின் பக்கத்து உபசாரணையால் தவத்தைவிட்டு ராஜ்யத்திற்கு வந்ததையும் வெகு பக்தியோடு படித்தவர்தானே மகாத்மா காந்தியவர்களும். தேசாபிமானம் விடுபட்டாலும் மதாபிமானம் விடுவதில்லை. நம் நாட்டுக் குருக்களும் மதாபிமானமுடைய எந்தக் குருவும் பக்கத்திலிருந்து செய்யும் மதப்புரட்டில் தலை சாய்ந்து விடுகிறார்கள். தன் பக்கமிருந்து நடிப்பவர்களால் 'தனக்குண்டாகும் நன்மைகளின் வழியே மெய்மறந்து அவர்கள்பால் மனம் பற்றி அவரவர்கள் இஷ்டத்திற்கு சார்ந்தே இருக்கிறார்கள். சில குருமார்கள் சுவாமி பூசையும் நித்தியகர்மானுஷ்டானங்களும் செய்து காலத்தைப் போக்குவதிலே பற்றுடையவர்களாய் இருப்பதனால் யாத்திரை செய்வதிலும் ஊரூராய் சுற்றி வீடுவீடாய் நுழைவதிலும் பிரியப்படுவதில்லை. அந்த குருமார்களை பக்கத்திலிருக்கும் சிஷிய கோடிகளும் காரியஸ்தர்களும் திட்டி அடித்து அவமதித்து கட்டாயத்தின் பேரில் வண்டியிலும் பல்லக்கிலும் ஏற்றிக்கொண்டு போவதுமுண்டு. போகுமிடத்தில் பக்கத்திலிருப்பவர்கள் எப்படி யெப்படிச் சொல்லுகிறார்களோ அப்படியே குரு சொல்லவும் செய்யவும் வேண்டும். இல்லையேல் திட்டும் முட்டாள் பட்டமும்தான் குருவுக்குக் கிடைக்கும். இது சகஜமாக நடந்து வருகிறது. குருமார்களின் பேரில் தான் நமது ஜனங்களுக்கு பக்தியும் அதிகம். அதனால் எதற்கும் அவர்களை முன்னால் நிறுத்தாவிட்டால் எந்த காரியமும் ஆவதில்லை. தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்தினிடம் தன்னையும் காண்பவனே உண்மை காண்பான் என்று குரு சொல்லுகையில் அது கேட்டு தன்னிடமுள்ள சிறந்த வஸ்துக்களையும் அவரது திருவோட்டில் போட்டு விடுகிறார்கள். ஆனால் தெய்வத்தின் பொது விதிகளு அடங்கி நடப்பவர்களை வர்ணாசிரமக்கொடுமையால் துன்புறுத்துகையில் குருமார்கள் அதனை முகமலர்ச்சியுடன் ஏற்று தங்கள் திருவடி மண் சாத்தி அவ்வருணாசிரமக் கொடுமைக்காரர்களை ஆசீர்வாதம் செய்கிறார்கள். இப்படித்தான் நமது ஜாதி வாழ்க்கை கெட்டுப்போயிற்று. இதற்குப் பரிந்து பேசுகிறவர்கள் யாராவது ஏற்பட்டு பலவித கஷ்டங்களை கடந்து வந்தாலும் மதப்பற்றுதலினாலும் ஏமாந்து போகிறார்கள். இந்த கஷ்டங்களை மீறிச் செல்லவே வீரர் கமால் பாட்சா மதத்தை உலக விவகாரத்திலிருந்து பிரித்து விடத் தீர்மானித்து விட்டார். அவரை மகாத்மாக்களுக்குள்: மகா வீரரென்று சொல்லவேண்டும். ஜன சமூகத்திற்கோ தங்கள் தேசத்திற்கோ உலக உயர்வை நிலை நிறுத்திக்கொடுத்தவர்கள் எல்லாம் மதப்பற்றை விட்டவர்களாகவே யிருக்கிறார்கள். பிரபுக்களுக்கும் ராஜாக்களுக்கும் கண்ணில்லை காதுண்டு என்னும் பழமொழி போல் ராஜாக்களும் பிரபுக்களும் பக்கத்திலிருந்து இதம் சொ

இதன் தொடர்ச்சி 18 ம் பக்கம் பார்க்க

இனம்! இனம்!! இனம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

## (அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனனி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உபவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

### இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பேனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

# தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகத்திற்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை அனுப்பிவிடுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| நெ. | 1. | ஜெர்மன கம்பிக்கரைப் போர்வை | 1 ரூ. | 9—8—0 |
| நெ. | 2. | பாரிஸ் பூக்கரைப் போர்வை | 1 ரூ. | 10—8—0 |
| நெ. | 3. | ஷை உயர்ந்தது பெரிய சயிஸ் | 1 ரூ. | 16—0—0 |
| நெ. | 4. | காஷ்மீர் கை நெசவுப் போர்வை | 1 ரூ. | 12—0—0 |
| நெ. | 5. | ஜெர்மன் மேகவர்ணப் போர்வை | 1 ரூ. | 15—0—0 |

**கே. எஸ். முத்தையா அன் கம்பெனி, மதராஸ்**

K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.

# ஆநந்த குண போதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதாரர்களுள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்து மாமா.

இரண்டாம்பதிப்பு.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.


முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு $3\frac{1}{2}'' \times 2\frac{1}{2}''$ ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பேனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

## அனுப்பபாளையம் மெய்கண்ட சன்மார்க்க சபை ஏழாவது ஆண்டு நிறைவுவிழா.

திருப்பூரிலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ள அனுப்பர்பாளையத்தில் மேல்கண்ட விழாவானது 9—12—27-தேதி மாலையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடைத்தைச்சார்ந்த ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகளின் அவைத்தலைமையின் கீழ் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. கூட்டத்திற்கு உள்ளூர் வியாபாரிகள் பலரும் பாத்திர வியாபாரிகள் அநேகருமாகப் பெருங்கூட்டம் கூடியது. திருப்பூரிலிருந்து திருவாளர்கள் கே. எஸ். ராமசாமி கவுண்டர், டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் பி. ஏ., பி. எல்., பி. வீரபத்திர செட்டியார் பி. ஏ., பி. எல்., கே. ஆர். ஈஸ்வரமூர்த்திக் கவுண்டர், கே. வி. வெங்கிடாசலம் பிள்ளை முதலியவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஊரின் மத்தியிலுள்ள பொது மண்டபத்தில் 3-மணிக்கு ஸ்வாமிகள் தலைமை வகிக்கும்படி. திரு. ஈஸ்வர மூர்த்திக் கவுண்டராலும், திரு. க. குமாரசாமி செட்டியாராலும் முறையே பிரேரேபித்தும் ஆமோதித்தும் சபையோர்களால் பெருத்த கரகோஷத்தினிடையே ஸ்வாமிகள் தலைமை வகித்து முகவுரையாக சங்க அபிவிருத்தியைப்பற்றியும் ஊக்கத்தைப்பற்றியும் சிறிது நேரம் பேசியபின் அக்கிராசனர் அவர்களின் கட்டளைப்படி,

**நமது கடமை.**

என்னும் விஷயமாய் திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் அரைமணி நேரம் அரிய உபந்நியாசம் செய்தார். அடுத்தாப்போல்,

**வாய்மை.**

என்னும் விஷயமாய் திரு. கே. ஆர். ஈஸ்வரமூர்த்தி கவுண்டர் அவர்கள் விரிவாகப்பேசினார். அடுத்தபடியாக,

**கிராம சீர்திருத்தம்.**

என்னும் பொருள்பற்றி திரு. பி. வீரபத்திர செட்டியார் அவர்கள் அரைமணி நேரம் அரிய உபந்நியாசம் செய்தார். அருமையான சிற்றுண்டி அளிக்கப் பெற்றது. மீண்டும் சபைகூடி திரு. நஞ்சப்ப செட்டியாரவர்களால் "சைவத்தின் பெருமையைப்பற்றி" சிறிது நேரம் பேசியபின், இந்து மதமும் பிராமணீயமும் என்பதைப்பற்றி திருப்பூர் ஸ்ரீ கே. வி. வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் செய்த சொற்பொழிவின் சாரமாவது:-

நண்பர்களே!

இதுபோன்ற பிரசங்கங்களை நமது தலைவர் வைக்கம் வீரர் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் செய்தால்தான் சகல பொருத்தமும் இருக்கும். என்போன்றவர்கள் செய்வதானது மயிலைப்பார்த்து கோழி ஆடியதுபோல்தானிருக்கும் என்பதில் ஐயமில்லை. சகோதரர்களே! மதம் என்பது மார்க்கம். அதாவது கடவுளை அடையக்கூடிய வழி என்பதேயாகும். இது, பல மார்க்கங்கள் இருப்பதால் பல மதங்களாக இப்போது வழங்குகிறது. எல்லா மதமும் ஒரே கடவுளைப்பற்றி தான் சொல்கிறது. ஆகவே எல்லா மதமும் உண்மையுடையதுதான். நமது ஹிந்து மதம் எதற்கும் தாழ்ந்ததல்ல. ஆனால் மற்றதைவிட மிகவும் பிற்போக்கான நிலைக்கு கொண்டுவந்து விட்டவர்கள் நமது மதப் பிரமுகர்களும் ஆசாரியர்களுமே யாவார்கள். அவர்கள் பெரும்பாலும், நமது பிராமணர்களே. பிராமணர்கள் சிறு தொகையினராயிருந்தமையாலும் அவர்கள் ஒரே கட்டுப்பாடுடையவர்கள் ஆனதினாலும், வாசித்தவர்கள் ஆனபடியாலும், தந்திரசாலிகளானபடியாலும், தங்கள் சுயநலத்தை உத்தேசித்தும், தங்கள் வமிச பரம்பரையாரின் நலத்தை உத்தேசித்தும், தங்களுக்குள்ள செல்வாக்கைகொண்டு, அக்காலத்திய அரசர்களை கைவசப்படுத்தி அவர்கள் ஆதரவில் வாழும்வித்வான்கள்,புலவர்கள் ஆகியவர்களைகைக்குள் போட்டு பல புராணங்களை நூதனமாக உற்பத்தி செய்தும், அநேகவற்றில் திருத்தி இடைச்செருகல் செய்தும், தாங்கள் உயர்தேவர்கள் என்பதாகச் செய்து வைத்துக்கொண்டும் லோக குரு,ஜாதி குரு,புரோகிதர், அர்ச்சகர் என்று பல உயர் பதவிகளை வைத்துக்கொண்டு மற்றவர்களிடமிருந்து பணங்களை காணிக்கை, வரி. கட்டளை என்பவைகளாலும், சமாராதனை, தானம், தர்மம் என்னும் பேராலும் பறித்துக்கொண்டு பிராமணரல்லாதார்களை எல்லா வழியிலும் இதுவரை தாழ்மைப் படுத்திக் கொண்டே வந்தனர். இப்பொழுது நாம் விழித்துக்கொண்ட படியால் இதுவரை நாம் சுயநலப் புராணங்களுக்கும் மநுதர்ம சாஸ்திரத்திற்கும் கட்டுப்பட்டு மோசம் போனோமென்றுணர்ந்து கடவுளால் கொடுக்கப்பட்ட அறிவைச் செலுத்தி சுருதி, யுக்தி, அனுபவம் இவைகளுக்கு சிறிதும் ஒத்துவராத குரு காணிக்கை, கல்யாணம, கருமாந்திரம், கோதானம், பூதானம், அர்ச்சனைகள், பூரி, சமாராதனைகள் இவைகள் பொறுத்த மற்ற வழியில் செய்து வருகிறோமென்றும், ஒரு ஜாதியின் சீர் வரிசையருக்கள் இன்னொரு ஜாதியாரைக் கொண்டு செய்வதும், ஒரு ஜாதியின் பிதுர்க்களாக இன்னொரு ஜாதியாரை ஏற்படுத்தி வருவதும், ஒரு வகுப்பாருக்கு இன்னொரு வகுப்பார் குருவாக இருப்பதும், மோட்ச உலகத்துக்கு நமது பிதுர்களுக்கு அனுப்புவதாக அரிசி, பருப்பு, காய்கறி, மாடு, பூமி இவைகளை நம்மிடமிருந்து பறித்து ஏமாற்றுவதும், பிறந்ததுமுதல் இறக்கும் வரையிலும், இறந்த பின்பும் பிராமணரல்லாதார் குடும்பத்தில் நடக்கும் ஒவ்வொரு விசேஷங்களிலும்பிராமணர்களுக்குக்கொடுப்பது தான் தர்மம் மற்றவர்களுக்கு கொடுப்பது பாவமென்றுகூட சொல்லிவைத்து நமக்குள் அறியாமையால் ஊறிக்கொண்டிருக்கிற மூடக்கொள்கைகளாகிய கரு மேகங்களை தகர்த்தெறிய ஞான சூரியன் கிளம்பி வந்திருப்பதால் இனிமேல் அவைகள் ஒழிந்து போவது நிச்சயம். இனியார் தடுத்தாலும் நிற்காது யென்றும், பல நாட்கள் அடிமைப்பட்டுக் கிடந்தவர்களுக்கு ஆண்டவன் அறிவைக்கொடுத்து மூடநம்பிக்கைகளை ஓட்டுவிக்கின்றாரென்றும் முன் காலத்தில் ஒவ்வொருகல்யாணங்களுக்கும் அந்தந்த ஜாதியாரே சடங்குகள் செய்து வந்திருப்பதற்கு அறிகுறியாக இப்போதும் பல வகுப்புகளில் அவரவர்களே செய்து வருகின்றார்களென்பதும், சில வகுப்பார்கள் நாகரீகமென்று நினைத்து ஒருவரைப்பார்த்து ஒருவர் கல்யாணம், திதி, வகையராக்களுக்கு அன்னியர்களைக் கொண்டு செய்து வருவதால் தங்கள் மதத்தை இழப்பதோடு மேலும் மேலும் ஜாதி பிற்போக்கடையக் காரணமென்றும், ஆகையால் நாம் இனிமேல் ஏமாறாமல் நமக்குள்ளாகவே பெரியோர்களைக்கொண்டு மணவினை, பிணவினை செய்துகொண்டு வரவேண்டுமென்றும், அதைவிடுத்து புராணம், மநு தர்மம் இதுகளை ஆதாரமாகக்கொண்டு ஏமாறக்கூடாதென்றும், புராணங்களில் சிலது வேண்டுமென்றே உற்பத்தி செய்து, சிலது திருத்தி யமைத்து வைத்திருப்பதென்றும், இதை பாமர ஜனங்கள் அப்படியே நம்புவதாலேயே இக்கஷ்டங்கள் வருகிறதென்றும், ஆனால் இந்த சந்தர்ப்பத்திலும் தங்களுக்கு ஒரு இமிகூட செல்வாக்குக் குறைவதற்கு பிராமணர்கள் சம்மதிக்கார்களென்றும், உதாரணமாக பெரிய புராணத்தில் நந்தன் சரித்திரம் ஒன்றும், அப்பூதியடிகள் சரித்திரம் ஒன்றும், எடுத்துக்காட்டுகிறேன். நந்தன் சரித்திரம் அநேகமாக பிராமண நண்பர்களால் உபன்யாசம் செய்யப்படுகிறது. அது சமயம் பல பிராமணர்களும் பெருங்கூட்டமாய் வருகின்றார்கள். நந்தன் தன்னுடைய தாழ்ந்த சரீரத்திலிருந்து நேரே கடவுளிடம் போக முடியாமல் சுவாமி சொற்பனத்தில் சொல்லி பிராமணர்களால் அக்கினி வளர்த்தி அதில் மூழ்கி பிராமண சரீரம் பெற்று பகவானிடம் சென்றதாக இருப்பதால் இதைப் பெருமையாகச் சொல்லும்போது சந்தோஷ ஆரவாரம் செய்து தங்களுக்குள்ளாகவே பிராமண ஜென்மம் படைத்தால்தான் பகவானை அடையலாமென்று தப்பாக நினைத்து வருகிறார்கள். இது கொஞ்சமும் பொருத்தமில்லை. நந்தன் மும்மலங்கள், அறுவகைக்குற்றங்கள் ஆகிய அஞ்ஞானமாகிய மாய்கையையை எம்பெருமான ஞானமாகிய அருட்பெருஞ்சோதியால் தகித்து ஆட்கொண்டார் என்பதுதான் உண்மை இதற்கு ஸ்தூலமாக புராணத்தில் நுழைத்து பிராமணீயத்துக்கு தப்பு வழியாகவும் சிறப்பைத் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். அதுபோலவே அப்பூதியடிகள் ஒரு உத்தம பிராமணர். அவரால் ஆசாரியராகவும் ஆண்டவனாகவும் பாவித்து வந்தவர் திருநாவுக்கரசு சுவாமிகளென்ற வேளாளர். ஆகவே முன்காலத்தில் பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லையென்பதும் ஒழுக்கத்தால்தான் உண்டு என்பதும் தெரிகிறது. ஆனால் இந்தச் சரித்திரம் ஒரு வேளாளரை ஒரு பிராமணன் பூசித்தபடியால் தங்களுக்கு குறைவென்று நினைத்து இந்தச் சரித்திரத்தை அவர்கள் பிரசிங்கிப்பதும் இல்லை. வேறொருவர் பிரஸ்தாபித்தாலும் ஒரு பிராமணரும் கூட்டத்திற்கு வரவும் மாட்டார்கள். ஆனபடியால் நாம் இனிமேலாவது கடவுள் கொடுத்த அறிவைக்கொண்டு மூட வழக்கங்கள் கட்டுக்கதை, புராணங்கள் இவைகளை ஒழிக்கவேண்டும், குரு வென்றவனை மயங்கி பவுன் ரூபாய்களைக்கொடுத்து அர்ச்சனை செய்து பாதோதகத்தை(குரு கொடுப்பது பாவம் என்று சமையல் செய்பவரால் கொடுக்க) வாங்கி சிவ. சிவ, ராம ராம என்று தெளித்துக்கொண்டு நீங்கள் கொடுத்த பணத்தால் சோம் பேறிகள் எல்லாம் ஆண் பெண் அடங்க ஆறுசுவை உண்டி சாப்பிடுவதை எட்டி எட்டி பார்த்துக்கொண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாலும் அவர்கள் சாப்பிட்ட மிச்சம் உங்களுக்குக்கொடுத்தால் பாவம் என்று ஆனை, குதிரை, மாடு, எருமை நாய் இவைகளுக்கு பாத்திரத்தோடு வைக்கிறார்களே. இந்தக்கொடுமையை யாரிடம் சொல்லுகிறது. பணம் உங்களுடையது, அடையாபாரணம் அரிசி, பருப்பு உங்களுடையது. ஆனால் உங்களுக்குத் தண்ணீரும் சோறும் கொடுத்தால் நரகம் வருமாம். நாமும் நம்பித்தான் வருகிறோம். 5 வயது பிராமணப் பையன் 50 வயது பிராமணரல்லாதாரை அடி, அடே என்றுதான் கூப்பிடுகிறான். இதை எந்த பிராமணரும் தடுப்பதில்லை நாமும் தடுப்பதில்லை. இப்படி யிருக்க நமக்கு சுயராஜ்யம் கொடுக்க ஆங்கிலேயர்கள் அவ்வளவு பைத்தியக்காரரல்ல. ஆகையால் நமக்கும் நமது தேசத்திற்கும் கதிமோட்சம் வேண்டுமானால் அயலான் உயர்ந்தவன் என்றாவது தாழ்ந்தவனென்றாவது நினையாமல் சமம் என்று நினைத்து எல்லோரும் கடவுள் புத்திரர்கள் என்ற உறுதிப்பாட்டுடன் நமக்குடற்பிறப்பாகிய சுயமரியாதையைக் கடைப்பிடித்து நடந்தாலல்லாமல் நாம் முன்னேற முடியாது. என்று வெகு உருக்கமாகப் பேசி முடித்தார்: அவ்வூர் பண்டிட் திரு சி. சொக்கநாத பிள்ளையவர்களது தாயாருக்கு பதினாறாம் நாள் சடங்கு 18-12-27 ல் பிராமணீயத்தை ஒழித்துச் செய்வதாக முடிவு செய்து விட்டார்கள்.

தலைவர்களுக்கும், உபந்நியாசகர்களுக்கும் திரு க. குமாரசாமி செட்டியார் வந்தனோபசாரம் செய்ய காரியதரிசி அவர்களால் மாலைகள் சூட்டப் பெற்று வந்திருந்தவர்களுக்கு சந்தன தாம்பூலம், பழம், கற்கண்டு. வழங்கப்பட்டு கடவுள் வணக்கத்துடன் கூட்டம் இரவு7-45 மணிக்கு இனிது கலைந்தது.

## இப்பொழுது பிராமணர் என்று கூறிக்கொள்வோரெல்லாம்

# உண்மையில் பிராமணர்கள் தானா?

(இக் கட்டுரை இம்மாதம் 3-ந் தேதி "ஜஸ்டிஸ்" பத்திரிகையின் கல்விப்பகுதியில் ஒரு ஆராய்ச்சிக்காரர் எழுதியதின் மொழிபெயர்ப்பு).

பண்டை நாட் சரித்திரங்களை ஆராய்ச்சி செய்ததின் பலனாக, 'இந்தியாவின் பூர்வீக மக்கள் தமிழர்களே யென்பதும், அவர்கள் உழுவித்துண்போரென்ற வேளாளர்களும் உழுவோர் என்ற தொழிலாளர்களும், ஆகிய இரண்டே பிரிவினர்களாய் வாழ்ந்து வந்தார்களென்பதுமான உண்மைகள் வெளியாகின்றன. வேளாளர் என்ற மொழிக்குச் சொல்லளவான் மண்ணிற்கு உடையார் என்பதே பொருளாகும்? (வேள் என்பது மண் அல்லது நிலம், ஆளர் என்பது ஆளுவோர் அல்லது உடையார்) இந்த இரு வகுப்பினர்களில் வேளாளர் என்ற பகுதியிலிருந்த ஒரு சிலர் வைதிக கருமங்களை மேற்கொண்டொழுகி 'ஆதி சைவர்கள்' என்று பெயர் பெற்றனர். மற்றொரு பகுதியினர் அரசு காரியங்களைச் செம்மை பெற நடத்துவிக்கும் கடமை பூண்டு மன்னர்கள் என்றும் தலைமை பூண்ட வகுப்பினர்களைச் சேர்ந்தவர்களென்றும் பெயர் பெற்றனர். மற்றும் ஒரு பகுதியினர் வாணிபத்தைக் கைக்கொண்டு வைசியர்கள் என்று பெயர் பெற்றனர். மேலும் இவ் வைசியர்கள் என்ற பிரிவினர்களில் பல உட்பிரிவுகள் தோன்றி ஒவ்வொரு தொழிலைக் கையாண்ட ஒவ்வொரு சிறு பிரிவினரும் அவ்வத்தொழிலின் பெயரால் அழைக்கப்பட்டு வந்தனர். இவ்வாறு நிலைபெற்ற பின்னர் சில காலஞ் செல்ல சீனத்தில் இருந்து துரானியர்கள் என்ற ஒரு முரட்டு வகுப்பினர் இவ்விந்திய நாட்டினுட் புகுந்தனர். அப்படிப் புகுந்தவர்கள் மேற்கூறிய தமிழர்களை வென்று அவர்களை யெல்லாம் தெற்கே துரத்தி இத்துரானியர்கள் இந்தியாவின் வடபகுதியில் குடியேறினர். இவ்வாறு சில காலங்கழிந்த பின்னர், இந்தியாவின் வடமேற்கேயுள்ள துருக்கி, பாரஸீகம் முதலிய நாடுகளிலிருந்து ஆரியர்கள் என்ற ஒரு வகுப்பினர் இந்தியாவினுள் நுழைந்தனர். இவ்வாறு நுழைந்த அவர்களை இந்தியாவின் வடபகுதியிற் குடியேறினதாகக் கூறிய துரானிய மக்கள் எதிர்க்கவே ஆரியர்கள் அவர்களை வென்று விரட்டி விட்டு அவர்கள் குடியேறியிருந்த பகுதியில் தாம் குடியேறினர். நாளேற ஏற அவர்களே அந்நாட்டின் பகுதிக்கு அரசர்களாகவும் மாறினர். அவ்வாறு அவர்கள் அரசுரிமை பூண்ட பகுதி தெற்கே விந்திய மலைத் தொடர் வரையிலும் பரந்திருந்ததாகத் தெரிகிறது. இவைகளெல்லாம் அந்த ஆரியர்களாலேயே எழுதப்பட்ட இருக்கு வேதத்திற் காணப்படுகின்றன. மேலும் சென்னைக் "கிருஸ்துவர் கல்லூரியின்" தமிழாசிரியராயிருந்த காலஞ் சென்ற திருவாளர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் எழுதிய "தமிழ் மொழி வரலாறு" என்ற நூலிலும் காலஞ்சென்ற தஞ்சை திருவாளர் ராவ் சாஹிப் மூ. ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் எழுதிய "தமிழ் மொழி" என்ற நூலிலும் இவைகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. மிகவும் குளிர்ச்சி பொருந்திய ஒரு நிலப்பகுதியிலிருந்து இந்த ஆரியர்கள் போந்தமையால் அவர்கள் வெண்மை நிறம் உடையவர்களாகவே இருந்தனர். இதனை இருக்குவேதம் முதற்பகுதி 7-வது அத்தியாயம் 11-வது செய்யுளில் காண்க. அதன் நேரான தமிழ் மொழி பெயர்ப்பு என்னவென்றால்:—

"எல்லோராலும் வந்திக்கப்பட்ட இந்திரனே! தாம் மருத்துக்கள் சூழத்தாசர்களையும் ஷம்யூனர்களையும் எதிர்த்துத் தமது இடியினால் அவர்களைச் சேதித்தருளினீர். இடிக்கரசே! பின்பு புலன்களை வெண்மை நிறமுள்ள நண்பர்களுக்கும் பகுத்தருளினீர்?" என்பதே.

ஆகவே ஆரியர்கள் வெண்மை நிறம்பூண்டவர்கள் என்பது சந்தேகமறப்பெறப்பட்டது. மேலும் இது பெயர் பெற்ற சமஸ்கிருத அறிஞரான மாக்ஸ் முல்லர் என்பவராலும் இதர அறிஞர்களாலும்ஒப்புக்கொள்ளப்பட்டு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் தாம் தாம் எழுதிய புத்தகங்களில், அவ்வாறு துருக்கி முதலிய இடங்களிலிருந்து வெளியேறிய ஆரியர்களில் ஐரோப்பாவின் பக்கம் சென்று குடியேறியவர்கள் ஐரோப்பியராகவும், இந்திய நாட்டிற் புகுந்து தங்கினோர் இந்தியர்களாகவுமாறினர் என்று எழுதிவைத்திருக்கிறார்கள். ஆகவே, மாஸிடோனியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த அலெக்ஸாண்டர் சக்ரவர்த்தியும், முகம்மதியர்களும் இந்தியாவில் சிறிது காலம் அரசுரிமை பூண்டிருந்ததற்குத் தக்க நியாயம் இல்லாமல் போகவில்லை. பண்டைய ஆரியர்களின் பழக்க வழக்கங்கள் தற்கால ஐரோப்பியர்கள், பாரசீகர்கள், முகம்மதியர்கள் ஆகிய இவர்களது பழக்க வழக்கங்களையே ஒத்திருந்தன. இந்த ஆரியர்கள், பன்றி, ஆமா, குதிரை முதலிய வன விலங்குகளின் இறைச்சியையும் பல் வகைத்தான மீன்களின் இறைச்சியையும் உண்டு வந்தார்கள் என்பது அவர்கள் எழுதிய ('Parvanasrartha Niyanam') ஒரு நூலிலேயே காணக்கிடக்கின்றது. மனுஸ்மிருதி 3-ம் அத்தியாயம் 268, 270ம் சுலோகங்களாலும், 5-ம் அத்தியாயம 10, 18-ம் சுலோகங்களாலும் அது பெறப்படுகின்றது. ஆகவே மேற்கூறிய இறைச்சிவகைகளைக் கொண்டு ஆண்டு சிரார்த்தங்களைத் தவறாது செய்வோரெல்லாம் பிராமண வகுப்பினருட் சேர்க்கப்பட்டு பெருமை வாய்ந்த பிராமணன் என்ற பெயரும் இடப்பட்டு அழைக்கப்பட்டு வந்தனர் என்பது வெளிப்படை. அதிலும் பசுவதையாகிய கோமேதம், குதிரை வதையாகிய அசுவமேதம், ஆகிய யாகங்களையும் பௌண்டரீக யாகத்தையும் செய்தவர்கள் பிராமண உத்தமர்களாகக் கருதப்பட்டு வந்தனர். பௌண்டரீக யாகமென்பது பலர் கூடிய ஒரு கூட்டத்தின் முன்னிலையில் அவர்களது கண்களுக்கெதிரே ஒரு பிராமண வாலிப விதவையும் ஒரு பிராமணப் பிரம்மச்சாரியும் கூச்சமின்றிப் புணர்வதாகும். கும்பகோணத்திற் கருகாமையிலுள்ள திரிபுவனம் என்ற ஊரில் இத்தகையப் பௌண்டரீக யாகம் ஒன்று 30 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. அதிற் புணர்ந்த இரண்டு தம்பதிகளும் வெளியே வந்தபோது அவர்களைக்கண்டோர் எல்லாம் கல்லாலடித்தனர், காறியுமிழ்ந்தனர், கடிந்து பழித்தனர்.

நிற்க, தென்னிந்தியாவில் பிராமணர்கள் என்றபெயரை புனைந்துகொண்டு திரிவோரெல்லாம் தாங்கள் ஆரியர்களின் வழித்தோன்றியவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். இதற்கு ஒரு ஆதாரமும் இல்லை. ஆகவே இக்கூற்று நியாயமற்ற முட்டாள் தனமான வய்க்கும் கூற்றேயாகும். மாக்ஸ் முல்லர் என்று நாம் மேலே குறிப்பிட்ட அறிஞரும் மதுரை ஜில்லா நீதிபதியாக திகழ்ந்த திரு. டி. எச். நெல்சன் என்பாரும் தென்னிந்தியப் பகுதியிலுள்ள பிராமணர்களெல்லாம் ஆரியக்கலப்புடையவர்கள் அல்லரென்றும் அவர்களெல்லாம் சமணமதத்திலிருந்து இந்து மதத்திற்குச்சேர்க்கப்பட்டவர்களென்றும் அதனாலேயே அவர்கள் இறைச்சி முதலியவற்றை உண்பதினின்றும் அவைகளைக்கொண்டு சிரார்த்தம் முதலியன செய்வதினின்றும் விலகினரென்றும் துணிந்து முடிவு கட்டியிருக்கின்றனர். இதற்கேற்றவாறு கல்கத்தா, காசி, பஞ்சாப் முதலிய வடபகுதியிலுள்ள பிராமணர்கள் தங்களுக்கும் தென்னிந்திய பிராமணர்கள் என்பாருக்கும் ஒரு தொடர்பும் இல்லையென்று வெளிப்படையாகக் கூறிக்கண்டிக்கின்றமையால் மேற்குறித்த முடிவை ஒப்புக்கொள்ளாமல் இருக்க தகுந்த நியாயமொன்றுங் காணவில்லை. மேலும் தென்னாட்டுப் பிராமணர்கள் கொள்ளும் பஞ்சாட்சரப் பொருளும் நோத்திப்பூணல் அணியும் விதமும் சந்தனப் பொட்டிடும் விதமும் பெரும்பாலும் சமணர்களது முறையை யொத்தே காணப்படுகின்றன. ஆகவே இதைப்பற்றி வேறு எந்த சந்தேகமும் தோன்றுவதற்கில்லை. அதிலும் இப்பிராமணர்கள் ஆதி சைவர்களுமல்ல என்பதற்கும் அவர்கள் உச்சரிக்கும் மந்திரங்களே சான்றாகும். சமய விசேஷ நிர்வாண தீட்சையை இவர்கள் பெறுகிறதில்லையாகையினால் இவர்களை ஆதி சைவர்களென்று கொள்வதுந் தவறு. பிராத பூஜைகளை யியற்ற இவர்களுக்கு உரிமை கிடையாது. அப்படியின்றி இவர்கள் பூஜை செய்தால் நாட்டில் கொடிய பஞ்சமும் பல தீங்குகளும் விளையுமென்பது பின் காணும் 'திருமந்திர' ச்செய்யுளால் விளங்கும்,

'பேர்கொண்ட பார்ப்பான் பிரான் தன்னையர்ச்சித்தாற், போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம். பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாமென்றே எர்கொண்ட நந்தியெனக் குரைத்தானே.

சமணர்கள் வேளாளர்களே யென்பதும் அதனால் அவர்கள் நமது நாட்டினர்களே என்பதும் யாவரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும். அப்படியிருக்க அவர் தானும் ஆரியப் பிராமணர்களுடன் உண்மையறியாமல் சேர்ந்து கொள்ளக்கருதிப் பெருமையும் கண்ணியமும் பொருந்திய தமிழர்களை யொதுக்க முயல்வது அறியாமையேயாகும். ஆரியர்கள் நான்கு வகுப்பினர்களாகப் பிரிந்து கொண்டு அவரவர் தொழிலுக்கேற்றவாறு பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டனர். தமிழர்களிடத்திலோ இத்தகைய பிரிவு வேற்றுமையில்லையென்று முன்னர் எடுத்துக் காட்டினோம், அதற்கு ஆதாரமாகக் கபிலரது அகவலையும் காட்டுகிறோம்:—

'வடதிசைப் பார்ப்பான் தென்றிசைக்கேகி நடையது கோணி நீசனாவான். தென் திசைப் புலையன் வடதிசைக்கேகி பழுதற வோதிப் பார்ப்பானாவான்'

பிராமணர்களது முயற்சியினலெழுந்த மனுஸ்மிருதியில் சூத்திரர்களுக்கு என்று விதிக்கப்பட்டிருக்கின்றன வெல்லாம் இப்பொழுதையத் தென்னிந்தியப் பார்ப்பனரால் செய்யப்பட்டு வருகின்றன. சூத்திரர்கள் என்று அழைக்கப்படுவோரால் செய்யப்பட்டுவரும் வேலைகளிற் பெரும் பாலன வைசியர்களுக்கென்று முன் விதிக்கப் பட்டனவையாகவே காண்கின்றன. ஆகவே பிராமணர்கள் என்று கூறித்திரிவோரில் பெரும்பாலார் சூத்திரர்கள் என்ற பிரிவினுள் தான் உண்மையாகப் படுகிறார்கள் என்றும் அதே காரணத்தினால் சூத்திரர்கள் என்று அழைக்கப்படுவோரிற் பெரும்பாலோர் வைசிய வகுப்பினுட் படுகிறார்கள் என்பதும் சொல்லாமலே பெறப்படும். பிறப்புரிமையென்ற ஏகபோக வழியுரிமையையடிப்படையாக்கொண்டே தான் சாதி பிரிக்கப்பட்டது என்று நிலை நிறுத்த முயல்வோர்கள் தங்கள் நியாயங்களை வெளியிட்டும், அதற்குத்தக்க விடையிறுக்கக் காத்திருக்கிறோம்.

"திராவிடன்"

### பட்டுக்கோட்டை தாலூகா பேராவூரணியில்

## சுயமரியாதை மகாநாடு.

நாயக்கரின் உபந்நியாசம்.

பேராவூரணி ரைஸ் மில்லுக்கு எதிரில் 22—11—27 தேதி மாலையில் பிரம்மாண்டமான மகாநாடு ஒன்று கூடியது. சுமார் 2000 ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தனர். துவக்கத்தில் ஸ்ரீமான் திருஞான சம்பந்த முதலியாரால் கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டது. ஸ்ரீமான் எஸ். வி. லிங்கம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ ப. சு. தண்டபாணி செட்டியாரால் ஆமோதிக்கப்பட்டு, பட்டுக்கோட்டு பிராமணரல்லாதார் தலைவரும், தாலூகா, ஜில்லா போர்டு அங்கத்தினருமாகிய ஸ்ரீமான் கு. பா. கோவிந்தசாமி செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவைத்தலைவர் முகவுரையாகச் சில வார்த்தைகள் பேசியபின் ஸ்ரீ சிதானந்த பிரம்மச்சாரி, திருச்சி விஸ்வநாத பிள்ளை, கண்ணப்பர், அழகிரிசாமி நாயுடு முதலியவர்கள் பேசியபின் சுயமரியாதை இயக்கத் தலைவரும் வைக்கம் வீரருமாகிய ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களுக்கு பேராவூரணி சுயமரியாதைச்சங்கத்தினராலும், முஸ்லீம் அஞ்சுமன் சங்கத்தாராலும், முறையே வரவேற்புப்பத்திரங்கள் வாழ்த்துப் பாக்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன.

ஸ்ரீமான் நாயக்கரவர்கள் அவ்வரவேற்புகளுக்கு தக்கவாறு பதிலளித்து விட்டு மேல் கொண்டு பேசியதின் விபரமாவது:—

நானும் எனது சகாக்களும் எதைச்சரியென்று உணர்ந்தோமோ, அதையே எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டுமென்ற கருத்துடனேயே இயன்ற தொண்டு செய்து வருகிறோம். எங்களுக்கு இத்தொண்டு வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்டதல்ல வென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். நாம் இந்நாட்டில் பிறந்து இந்நாட்டில் வளர்ந்து வீரத்துடனும் கீர்த்தியுடனும் வாழ்ந்து வந்து இன்று அன்னியர்கள் ஏமாற்றத்தில் அகப்பட்டு சுயமரியாதை அற்று மிருகங்களைப்போல் நடத்தப்பட்டு வரும் கொடுமைகளைக் கண்டே அதை நிவர்த்திக்க உழைத்து வருகின்றோம். ஏனெனில் நமது மக்களில் 100-க்கு 90 பேர் இப்போது கிணறுத் தவளையாகவே யிருந்து வருகின்றனர். உலகத்தின் இதர தேசங்களையும் அத்தேசத்தாரின் நிலைமையையும் அவர்களது பழக்க வழக்கங்களையும் மற்ற காரியங்களையும் நம்மில் அநேகர் தெரிந்து கொண்டிருக்கவில்லை. இது விஷயங்களை யறிந்து நமது நிலைமையையும் கவனித்து எங்கள் புத்திக்குச் சரியென்று பட்டதைச் சொல்லவே முன்வந்திருக்கின்றோம். அதை நீங்கள் செவ்வையாய் கவனித்து யோசனை செய்து பார்த்து உங்கள் புத்திக்குச் சரியென்று பட்டால் அதைச் செய்யவேண்டுமென்றே உங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் இப்போது எங்களை வரவேற்ற முழக்கத்தையும் பாராட்டுதலையும் ஊக்கங்களையும் ஆவேசங்களையும் பார்க்கும்போது எங்கள் ஊழியத்தை [illegible]ங்கள் ஆதரித்து வருகின்றீர்களென்று தெரிவதுடன் அதனால் எங்களுக்கும் நாங்கள் மேற்கொண்டுள்ள காரியத்தில் ஊக்கத்தை அளிக்கின்றது. முக்கியமாய் நம்மவர்கள் என்று சொல்லி நம்மை ஏமாற்றும் பார்ப்பனீயக்கொடுமையிலிருந்து விடுபட்டு சுயமரியாதை யடையவே நாம் இம்முயற்சியிலீடுபடுகின்றோம். பார்ப்பனரல்லாதார் என்று நாம் நம்மை கூறுவதால் நாம் பிராமணர்களை விலக்கி வைத்திருக்கிறதாக நீங்கள் நினைக்கக்கூடும். நம்மைத்தான் அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கிறார்களே தவிர, நாம் அவர்களை விலக்கவில்லை. உதாரணமாக சாப்பாட்டுக் கடைகளிலும், காபி ஓட்டல்களிலும், குளங்களிலும், குட்டைகளிலும், ஆலயங்களிலும், பள்ளிக்கூடங்களிலும், வேத சாஸ்திரங்கள் என்பவைகளை படிப்பதிலும், வெகு காலமாகவே நம்மை பார்ப்பனர்கள் விலக்கி வைத்து தங்களுக்கு தனி இடமும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர், மிலேச்சர் என்பதாக அநேக வகுப்புக்களை யுண்டு பண்ணி மக்களைப்பிரித்து வைத்து எல்லோருக்கும் தாங்கள் மேலென்றும் ஏனையோர் தாழ்வென்றும் திட்டப்படுத்தி அதற்கு ஆதாரமாக கடவுள் சொன்னார் கடவுள் செய்தார் என்று சாஸ்திரங்களையும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள். வெள்ளைக்கார அரசாங்கத்தில்கூட இந்து லா என்று சொல்லப்பட்ட சட்டத்திலும், நீதி இலாகாத் தீர்மானகளிலும் கூட, பிராமணர்களுக்கும், மற்றவர்களுக்கும் தனியாக சட்டமிருப்பதைக் காணலாம். இது கிரிமினல் சிவில் இரு தரப்பிலுமிப்படி இருக்கிறது. பார்ப்பனத் தலைவராகிய ஸ்ரீ சீனிவாசய்யங்கார் கூட இதை ஒப்புக்கொண்டு இனி இந்த வித்தியாசம் இருக்கக்கூடாது என்று சொல்லி இருக்கிறார். இதையெல்லாம் எதை ஆதாரமாக வைத்துக்கொண்டு பார்ப்பனர்கள் நடத்தி வருகின்றார்களென்றால் இந்துமதம் என்ற பெயரால்தான். இந்துக்கள் என்று சொல்லிக் கொள்வதனால் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நாம் அவர்களுக்கு அடிமையாகவிருந்து வருகின்றோம். இதைப்போக்கத்தான் நாம் இந்தக் கிளர்ச்சியை ஆரம்பித்தோம். பிராமணருக்கொன்றும், மற்றவர்களுக்கொன்றுமாக நீதிகளில்லாமல் வித்தியாசங்களில்லாமல் செய்யவே நாம் இப்போராட்டம் செய்கின்றோம். இதுவே தவிர அவர்களிடம் துவேஷம் கிடையாது, நமது நாட்டுக்கும் நமது மக்களுக்கும் விடுதலையும் நல்வாழ்வும் கிடைக்கவேண்டுமானால் ஒருவருக்கொருவர் வித்தியாசங்களை விட்டொழித்து பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் நடந்து கொண்டு ஒற்றுமையடைய வேண்டும். இன்றேல் முடியாது. உயர்வு தாழ்வு என்ற தத்துவம் போனாலொழிய அது சாத்தியமில்லை இத்தத்துவம் நமது மதத்தின் அஸ்திவாரத்திலேயே பதிந்து கிடக்கின்றது. நமது மத வேதங்களும், ஸ்மிருதிகளும், புராணங்களும்தான் இந்தப்பாழும் தத்துவத்திற்கு ஆதாரம். இம்மாதிரி வித்தியாசம் கற்பித்து மக்களை சுயமரியாதையில்லாமல் செய்து மிருகங்களாக்கி நாய் பன்றிகளைவிட இழிவாய் நடத்த ஆதாரமாய் இருக்கும் மதம் எதுவானாலும் அதை அழித்தாகவேண்டும். நான் இவ்வாறு சொல்வது உங்களில் சிலருக்கு வருத்தமாகத் தோன்றலாம். நான் சொல்வதை பார்ப்பனர்கள் சொல்வது போல் அப்படியே நம்பவேண்டுமென்று உங்களை கட்டாயப்படுத்தவில்லை. நான் நம்புவதை எனக்குத் தோன்றியதை நான் கண்டதைச் சொல்லுகிறேன். உங்கள் பகுத்தறிவைக்கொண்டு பார்த்து நான் சொல்லுவது நியாயமாயிருந்தால் அதைக்கைக்கொள்ளுங்கள், குற்றமானால் தள்ளுங்கள். அல்லாமல் இம்மாதிரி குருட்டுத்தனமாக நம்பிக்கைகொண்டு இன்னமும் மிருகப்பிராயத்திலிருந்தால் நாம் முன்னுக்கு வரமுடியாது. அநேகமாய் பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்த்து உண்மையை கண்டுபிடித்து அவற்றை செய்கையில் நடத்தியதனால்தான் இதர நாட்டினர்கள் முன்னுக்கு வந்திருக்கின்றார்கள். நாம் வெகு புத்திசாலிகளாகவும் ஞானிகளாகவும், நாகரீகர்களாகவும் இருந்ததாகச் சொல்லப்பட்ட காலத்தில் மேல் நாட்டினர் காட்டு மிராண்டிகளாக இருந்தனர். இன்றைக்கு சுமார் 1000 வருஷங்களுக்கு முன் இவ்வாறிருந்ததாக மேல்நாட்டார்களே சரித்திரம் எழுதி வைத்திருக்கின்றனர். இப்பொழுது காலதிற்கேற்றவாறு நாகரீகமடைந்து பகுத்தறிவின் மேன்மையினால் அக்குறைகளை நீக்கி தெய்வத்தன்மை என்பதை அடைந்து உலகில் பெரும்பாகத்தை ஆளும் ஸ்தானத்திலிருக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ மேன்மையாக இருந்ததாகக் கதைகள் எழுதிவைத்துக் கொண்டிருக்கும் நாமோ அவர்களுக்கு அடிமைப்பட்டு இழிவான நிலையிலிருந்து வருகின்றோம். குருட்டுக்கொள்கைகளை அவர்கள் விட்டொழித்ததாலேயே அவர்கள் நல்ல வாழ்வடைந்தார்கள். நாம் இன்னும் மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்து கிடப்பதால் பாப்பான் நம்மை வேசிமகன், அடிமை, சண்டாளன், தீண்டாதவன் என்கின்றான். வெள்ளையன் நம்மை அஞ்ஞானி, கூலி, காட்டுமிராண்டி என்கின்றான். புரோகிதக்கொடுமையால் ஏற்பட்ட மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்ததாலேயே மேல்நாட்டினர் இன்று இந்நிலையிலிருக்கின்றார்கள். நம் நாட்டுப் புரோகிதக்கூட்டத்தைப் போலவே மேல் நாட்டிலும் 500 வருஷத்திற்குமுன் இருந்த புரோகித வகுப்பார் பாவமன்னிப்பு டிக்கட்டு என்று மக்களுக்கு விற்பனை செய்து பணங்களை கொள்ளையடித்து வந்ததாக சரித்திரம் இருக்கின்றது. அக்கொடுமையை அவர்களில் சில சீர்திருத்தக்காரர்கள் தோன்றியொழித்ததால் தான் அநேக அற்புதங்களைக் கண்டுபிடித்து ஆண்மையுடன் மேன்மையடைய முடிந்தது. பாவமன்னிப்புச் சீட்டு வாங்கும் பயித்தியகாரர்களாயிருந்தவர்கள் இன்று எவ்வளவோ தெய்வீகச்செயல்களைப் புரிகின்றார்கள். இது எதனால்? காலப்போக்கையறிந்து அறிவை உபயோகித்து மூட வாழ்விலிருந்து விலகியதால் தான் என்று மறுபடியும் சொல்லுகின்றேன். நாமோ பழையவழக்கமென்ற கயிற்றால் தலையெடுக்க விடாதபடி கட்டுப்பட்டு

இதன் தொடர்ச்சி 14 ம் பக்கம் பார்க்க

திருச்சி ஜில்லாவில்

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரின்

# சுயமரியாதைப் பிரசாரம்

## பூவாளூரில் என்றுமில்லாதகாட்சி

## பார்ப்பன சூழ்ச்சியின் ஏமாற்றம்

### துப்பாக்கிதாங்கிய போலீஸ் படையும் மேஜிஸ்ரேட்டும்

(ஒரு நிருபர்)

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தபடி திருச்சி ஜில்லாவில் சுயமரியாதைப் பிரசாரம் செய்வதின் பொருட்டு 9-தேதி இரவு ஈரோட்டிலிருந்து புறப்பட்டு 10-தேதி காலை திருச்சி கோட்டை ஸ்டேஷனில் வந்திறங்கினர். நாயக்கரை வரவேற்க திருச்சி ஜில்லா சுயமரியாதைச் சங்கத் தலைவரும் காரியதரிசிகளும் அங்கத்தினர்களும் தென்னிந்திய நலவுரிமைச் சங்க அமைச்சர்களும் திருச்சி காங்கிரஸ் தலைவரும் மற்றும் பலரும் ரயில்வே மேடைக்கு வந்து சுயமரியாதைச் சங்க காரியதரிசி ஸ்ரீமான் கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை அவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு எல்லோருமாக விருந்துண்டு ஸ்ரீமான்கள் ச. அ. க. கலியபெருமாள் நாயுடு, கிருஷ்ணசாமி பிள்ளை, ச. ம. சி. பரமசிவம் செட்டியார், தி. ச. அ. வேணுகோபால் நாயுடு, க. கலியபெருமாள் நாயுடு, திருஞான சம்பந்த முதலியார், ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, மணவை ரெ. திருமலைசாமி. முசிரி என். எஸ். கந்தசாமி மற்றும் பலருடன் மோட்டாரில பூவாளூருக்கு பிரயாணமாகி 10-மணிக்கு பூவாளூர் வந்து சேர்ந்தார்கள். பூவாளூரில் வழி நெடுக தோரணங்களும், சுயமரியாதை ஓங்குக என்றும் வைக்கம் வீரர் வாழ்க என்றும் அழகிய பல வளைவுகளும், கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த தெருவழியே இதற்கென்று அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். மாலை 4-மணிக்கு விடுதி மாளிகையில் இருந்து ஸ்ரீ நாயக்கரையும் அவரது கோஷ்டியையும் பெருத்த கூட்டத்தோடு மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக மகாநாடு மைதானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இங்கு குறிப்பிடவேண்டிய முக்கிய விஷயமென்னவென்றால், ஸ்ரீ நாயக்கர் பூவாளூருக்கு வரப்போவதாகவும், மகாநாடு நடத்தப்போவதாகவும், 4-நாளைக்கு முன்பு இருந்தே பெரிய தடபுடலான பிரயத்தனங்கள் நடந்து வருவதை அறிந்த அங்குள்ள சில பார்ப்பனர் அவ்வூரிலுள்ள வேறு விஷயமான கக்ஷிப்பிரதி கக்ஷியை தங்களுக்கு அனுகூலமாய் உபயோகப்படுத்திக்கொண்டு ஒரு கக்ஷியில் உள்ள இரண்டொருவரை தங்கள் வசமாக்கி மகாநாட்டை கலவரமுண்டாக்கி கலைத்து நடைபெற முடியாமல் செய்யவேண்டுமென்று வேண்டிய ஏற்பாடுகள் செய்து வைத்ததோடு சுற்றுப் பக்கங்களில் உள்ள ஆதிதிராவிடர்களில் சிலரைப்பிடித்து அவர்களை மகாநாடு நடத்த ஏற்பாடு செய்து வைத்திருந்த இடமான ஒரு கோயிலின் முன் மைதானத்தில் பொங்கல் என்றும் பூஜை என்றும் சொல்லிக்கொண்டு தப்பட்டை அடித்து உபத்திரவம் செய்யும்படி ஏற்பாடு செய்து விட்டார்கள். ஆதிதிராவிடர்களும் நாயக்கர் ஊர்வலத்திற்கு பின்னால் மீட்டிங்கை கலைக்க பலதப்பட்டை சப்தங்களுடன் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தார்கள், மீட்டிங்கை கலைக்க எண்ணி உள்ளூர் காரர்களிலும் இரண்டொருவர் குடி வெறியுடன் கூடவே வந்துகொண்டிருந்தார்கள்.

இந்த விஷயம் அறிந்த உள்ளூர் பிரமுகர்கள் மகாநாடு கூட்டத்தை கோவிலுக்கு முன் போடாமல் திடீரென்று சமீபத்திலுள்ளவேறு ஒரு மைதான இடத்திற்கு அதாவது ஆற்றங்கரை அரசமரத்தடிக்கு கொண்டுபோய் விட்டவுடன் விஷமக்காரர்கள் எல்லோரும் ஏமாற்றமடைந்துவிட்டார்கள். ஆகவே ஊர்வலம் மைதானம் போய் சேர்ந்ததும் அந்த இடத்தில் துப்பாக்கியுடன் சுமார் 10 போலீஸ்காரர்களும் ஏட்டும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்ட்ரேட்டும் காணப்பட்டார்கள். இந்த காக்ஷி ஜனங்களுக்கு மிகவும் அதிசயத்தை உண்டாக்கி விட்டதுடன் இந்த சங்கதி கேள்விப்பட்டு ஏதோ பெரிய கலவரம் நடைபெறப் போவதாய் நினைத்து 10 நிமிஷத்திற்குள் இரண்டு மூன்று ஆயிரம் ஜனங்கள் அங்கு வந்து கூடிவிட்டார்கள்.

கடைசியாக துப்பாக்கியுடன் போலீசுகாரர்களும் மாஜிஸ்ட்ரேட்டும் எதற்காக வந்தார் என்று விஜாரிக்க, அவ்வூர் பார்ப்பனர்கள் சிலர் நாயக்கரும் அவரது கோஷ்டியாரும் அங்குள்ள ஏதோ ஒரு கோவிலுக்குள் ஆதி திராவிடர்களை கூட்டிக்கொண்டு நுழையப் போவதாகவும், அதனால் கலகமேற்படுமென்றும், அதற்காக 144 உத்திரவு போட்டு பந்தோபஸ்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், அதிகாரிகள் உத்திரவு போட இஷ்டமில்லாமல் நேரே பந்தோபஸ்துக்கு வந்திருப்பதாகவும் சொல்லிக் கொள்ளப் பட்டது. எப்படி இருந்த போதிலும் இவ்வளவு பெரிய கூட்டம் கூட இப்பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சி நாயக்கருக்கு அனுகூலமாகவே முடிந்தது. கூட்டத்தில் சுமார் 500 ஆதி திராவிடர்களும் 500 பெண்களும் மற்றவர்களில் 2000 பேரும் இருக்கக் கூடும். இதில் பார்ப்பனர்களும் 100-க்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள் என்று சொல்லலாம்.

கூட்டம் ஆரம்பித்து கடவுள் வாழ்த்து கூறி, அப்பிராந்தியத்தின் பிரமுகர்களில் ஒருவரானவரும் தாலூக்கா போர்ட் மெம்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

## ராயல் கமிஷனும்

### ஸ்ரீ சீனிவாச ஸ்ரீமதி பெசன்டு வகையார் கூட்டமும்.

ஓர் பிரபல அரசியல்வாதி எழுதுகிறார்.

சென்ற ஒருமாதமாக எல்லாப் பத்திரிகைகளும் ராயல் கமிஷனைப் பற்றித்தான் எழுதுகின்றன. இதற்கு நடு நாயகமாக விளங்குபவர் ஸ்ரீ. சினிவாசய்யங்கார், ஸ்ரீ. பெசன்டம்மையார் ஆகியவர்களே. இவர்கள் வால்பிடித்து திரியும் சிலரைப் பற்றியோ புது ஐயங்காராக மாறிய வைத்திய வரதராஜுலு முதலியோரைப் பற்றியோ எதையும் எழுத இன்று விரும்பவில்லை. கமிஷனை பகிஷ்கரிக்கப் போவதாக கூறும் கூட்டத்தில் யோக்கியப் பொறுப்புடையவர்களோ, ஜன சமூகத்தின் முன்வந்து சகல தியாகத்திற்கும் தயாராயிருந்து பகிஷ்கரிக்க வேண்டும் என்று தைரியமாய் கூறுபவர்களோ எவருமில்லை என்பது மட்டும் உண்மையும் சத்தியமானதுமாகும்.

இப்புரட்டுக்காரர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றதால் 33 கோடி ஜனங்களும் இதை கேட்டுவிடுவார்களே என்று மூடத்தன்மையுடன் நடுநடுங்கி இதை எழுத முன்வரவில்லை. திரை மறைவில் நடந்த நடக்கும் ரகசியத்தையே சிறிது எழுத விரும்புகிறேன்.

இன்றைய ஜன சமூகம் சற்று கண்விழித்திருக்கிறது. இவர்கள் இதுவரையில் நடத்திய சதியாலோசனைகளையும் சிறிது எண்ணிப்பார்ப்பது நலம். ஸ்ரீ. தேசபந்து சித்தரஞ்சனர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் பொழுது திரு. கோஸ்வாமி இங்கிலாந்து சென்றார். ஆங்கில நாட்டு ராஜதந்திரிகளுக்கும், தேசபந்துவுக்கும் கோஸ்வாமி மூலியமாய் நடந்த சம்பாஷணை தேசபந்து உயிர் துறந்தவுடன் முடிந்தது. அதன் பின் நமது திரு. வி. ஜே. படேல் பிரபு "நான் இங்கிலாந்துக்கு பார்லிமெண்ட் நடவடிக்கையை கவனிக்க செல்கிறேன். ராயல் கமிஷனை பற்றி கவலையில்லை" என்றார். அவருக்கு பின்னால் சென்ற லாலா லஜபதியும், "சொந்த வேலையாகப் போகின்றோம் ராயல் கமிஷனைப்பற்றி கவலை இல்லை" என்றார்கள். ஆனால் இம்மூன்று பெரியார்களும் பம்பாயில் கப்பல் ஏறும்போது சொன்ன சேதி இதுவேயன்றி இங்கிலாந்தில் இவர்கள் என்னசெய்தார்கள் என்பது நமக்கு தெரியாவிட்டாலும், இவர்கள் வாயால் சொல்லியபடி நடக்கவில்லை என்பதற்கும் இவர்களின் முழு கவனமும் ராயல் கமிஷனைப்பற்றியே இருந்த தென்பதற்கும் அதன்பின் அவர்கள் வெளியிட்ட அபிப்பிராயங்களே தக்க சான்றாகும்.

இனி வெளிப்படையாக நடந்தபுரட்டை பார்ப்போம். ஸ்ரீமதி பெசன்டம்மையார்சென்றஆண்டு காமன்வெல்த்பில் என்றதிட்டம் தயாரித்தார். இன்று பகிஷ்கரிக்கப் போவதாகக் கத்தும் கனவான்கள் யாவரும் அதில் கையெழுத்திட்டார்கள், அம்மையாரும் அத்திட்டத்தை தலையில் சுமந்து கொண்டு இங்கிலாந்து சென்றார். (அக்காலத்திலேயே நமது சமதர்ஸனியான 'குடி அரசு'ம்

தீர்க்கதரிசியான கைவல்லிய சாமிகளும், அந்த மசோதாவைப் பற்றி நன்கு சொல்லி இருக்கிறார்கள்) மந்திரியிடத்திலும், பாராளுமன்றத்திலும் பிரபுக்கள் சபையிலும், ஜனப்பிரதிநிதிகள் சபையிலும் எல்லாம் அதை அம்மையார் சமர்ப்பித்தார். பின்பு பிரம்ம ஞான மந்திரம் சொல்ல "ஆகாய கப்பல் ஏறி" பிரசங்கம் செய்தார். முடிவாக அம்மையார் தமது புகுந்தகமான நம் நாடு வந்தார். இன்று பாராளுமன்றத்தில் அம்மையின் மசோதாவை மூன்று முறை படித்து ஒப்புக்கொண்டு விட்டார்கள். அதைப்பற்றி அங்கு விவாதம் நடைபெற வேண்டியது தான் பாக்கி. இங்கு வந்த அம்மையோ 'ராயல் கமிஷனை பகிஷ்கரியுங்கள்' என்று பெலமாக சப்தம் போட்டுவிட்டு ஒரு சில பொதுக்கூட்டத்தில் (ரகசிய அறைகளில்) அதை நிறைவேற்றி விட்டு மறுதினம் பிரீ பிரஸ் அஸோஸியேட் பிரஸ் மற்றும் சில பத்திரிகைகளிலும் 'பெரும் பெரும் கூட்டங்களில் மசோதாவை ஒப்புக்கொண்டு விட்டார்கள்' என்று பறை சாற்றுகிறார். தமிழ் மாகாணம் ஒப்புக்கொண்டு விட்டதாம், ஆந்திர, கேரள, மாகாணங்களுக்கு சென்றிருக்கிறார். இதில் அம்மை பிரசங்கங்களில், ஜெர்மன் சண்டையில் நாம் உயிர் துறந்ததும் அன்று பணம் கொடுத்ததும் தான் காணப்படுகின்றது. அடுத்தபடியாக தானும் அருண்டேல் சாஸ்திரிகளும் ஹோம் ரூல் கிளர்ச்சி செய்ததால்தான் இன்று அனுஷ்டான முறையில் உள்ள சீர்திருத்தம் கிடைத்தது என்னும் இவை போன்றகள் தான் மலிந்து கிடக்கின்றனவேயன்றி ரௌலட் பில் சத்தியாக்கிரக இயக்கத்தால் செத்ததைப்பற்றியோ, வங்காள புரட்சியின் கிளர்ச்சி என்ற பெயரால் பல பெரியார்கள் சிறையில் அடைபட்டு கிடப்பதைப்பற்றியோ, நாபா மன்னனின் திக்கதியான நிலைமையைப்பற்றியோ, பிரபந்த கமிட்டி பதி முதலானதைப்பற்றியோ, டாடா இரும்புச்சாலை சத்தியாக்கிரகத்தைப்பற்றியோ, வங்காள அரசியல் கைதிகளைப்பற்றியோ, பூனா ஆயுதச் சட்ட போராட்டத்தைப்பற்றியோ, பர்மிய சகங்கங்கள் பதி முதலாக்கப்பட்டதைப் பற்றியோ, கவர்னர்களும் வைஸிராய் பிரபுவும் எதேச்சாதிகாரமாய் நடந்து வருவதைப்பற்றியோ, அன்னிய நாட்டு சாமானுக்கு அதிக வரிபோடவேண்டுமென்றும் உள்நாட்டு தொழிலை ஆதரிக்க வேண்டுமென்றும் கொண்டுவரப்பட்ட தீர்மானம் உதறி அடிக்கப்பட்டதைப் பற்றியோ, ஒத்துழையாமைப் போராட்டத் தோல்வியைப்பற்றியோ, திரு. காந்தி அலிசகோதரர்கள் இவர்களுடன் 70 ஆயிரம் கைதிகள் சிறைப்பட்டதைப்பற்றியோ ஒரு கோடி ரூபாய் செலவான வழிகளைப் பற்றியோ விளையாட்டுக்குகூட ஒருவார்த்தையும் இல்லை இது தான் இல்லை என்றால் இன்று அம்மையுடன் இரண்டறக் கலந்து பகிஷ்கார ஒப்பாரி வைக்கும் அரசியல் புலிகளான மாளவியா, லாலாஜி, நேரு முதலியவர்கள் அடுத்தடுத்து நான்கு தடவை மாகாண சட்டசபைகளிலும் இந்திய சட்டசபையிலும் சுயராஜ்ய திட்டம் தயாரித்து பார்லிமெண்டுக்கு அனுப்பி இருக்கிறார்களே! இதைப் பற்றியாவது ஏதாவது சொன்னாரா? என்று பார்த்தால் அதுவும் இல்லை. இந்த போக்கையில் அம்மையார் ஊர் சுற்றி பவனி வந்துகொண்டு இருக்கிறார். இனி இவ்வம்மையின் சிஷ்ய கணங்களின் யோக்யதை என்னவென்றும், முடிவு என்னவென்றும், அடுத்தாற்போல் ஆராய்வோம். சென்னை காங்கிரஸ் அம்மையாரையும் ஐயங்காரையும் ஒப்புக்கொள்ளப்போவதுமட்டும் உண்மை.

## ராயல் கமிஷன்

### ஸ்ரீ கெல்கர் அபிப்பிராயம்.

டிசம்பர் 10-தேதி பூனாவில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமான் என். சி. கெல்கர் தலைமை வகித்துப் பேசுகையில் 'கமிஷனைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்று நான் இப்போது சொல்ல முடியாது. சட்ட சபை கமிட்டிகளுக்கும் ராயல் கமிஷனுக்கும் எத்தகைய சம்மந்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று அறிவிக்கப்படும்வரை நான் காத்திருப்பேன். இந்தியர்களைக் கமிஷனில் சேர்க்காத ஒருகாரணத்திற்காக நாம் அதை பகிஷ்கரிக்கவேண்டாம். சட்டசபைக் கமிட்டிகளுக்கும் ராயல் கமிஷனைப்போல சம உரிமைகளும் அந்தஸ்தும் கொடுக்கபடுமானால் நாம் அதை பகிஷ்கரிக்க எவ்வித காரணமுமில்லை' என்றார்.

"திராவிடன்"

### கோயமுத்தூர் சரஸ்வதிகான சபா திறப்பு விழா.

கோயமுத்தூர் டவுனில் சரஸ்வதி கான சபா என்கின்ற ஒரு சங்கீத சபை ஸ்ரீமான் ஆர். கெ. ஷண்முகம்செட்டியாரவர்கள் தலைமையில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களால் 14—12—27 தேதி காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. அன்றைய திறப்பு விழாவுக்கு உள்ளூர் பிரமுகர்கள் பலரும், தென்னிந்திய பிரபல சங்கீத ஞானபாஸ்கரர்களாகிய காஞ்சீபுரம் நாயனா பிள்ளை என்கின்ற சுப்பரமணிய பிள்ளை, புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்தி பிள்ளை, பழனி முத்தய்யா பிள்ளை, மன்னார்குடி பக்கிரிபா பிள்ளை முதலிய பல அரிய பெரிய வித்வான்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

அன்று இரவு ஸ்ரீ. நாயக்கரின் ஆதரவையில் சபாவின் சார்பாய் வெரைட்டி ஹாலில் ஒரு சங்கீதக் கச்சேரியும் நடந்தது. ஜில்லாவின் எல்லா பாகத்திலிருந்தும் சுமார் 1000 கனவான்களுக்கு மேலாகவே விஜயம் செய்திருந்தார்கள். அன்று வசூலான பணம் சுமார் 1500 ரூபாயும் சங்கத்தின் அபிவிர்த்திக்கு உதவப்பட்டது. கச்சேரி முடிவில் ஸ்ரீமான் நாயக்கரால் வித்வான்களுக்கு வந்தனமளிக்கப்பட்டு மாலை சூட்டப்பட்டு சுமார் இரவு இரண்டு மணிக்கு சங்கீதக் கச்சேரி வெற்றியுடன் முடிவுபெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.


## விளம்பரம்.

**வியாபாரிகளே!**

உங்களுடைய வியாபாரம் செழிப்பாக நடக்க வேண்டுமா? அப்படியானால் நீங்கள் முக்கியமான பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல்வேண்டும். உங்களுடைய விளம்பரத்தை எங்களிடம் அனுப்புங்கள். நாங்கள் அதை எப்படி எழுதினால் ஜனங்களின் மனதைக் கவர்ச்சி செய்யுமோ அந்த வழியில் எழுதி அழகாகப் பிரசுரிப்போம். குறைந்த விகிதம் வேண்டுமானால் நீங்கள் எங்களுக்குத் தான் எழுத வேண்டும். வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்வதே.

வாஸ் அட்வர்டைஸிங் சர்விஸ்,
தபால் பெட்டி 119, மதராஸ்.


### தேவேந்திரகுல வேளாளர் பாலபோத தமிழ்ச் சங்கம்.


பள்ளபாளையம், கோயமுத்தூர்.

நிகழும் பிரபவ ஸ்ரீ மார்கழி மாதம் 3வ ஞாயிற்றுக்கிழமை மாலை ஷை சங்கத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவு விழா திருவாளர் கோவை நகர் மகா-ள-ள-ஸ்ரீ எஸ். என். பொன்னே கவுடர் அவர்கள் தலைமையில் நடைபெறும், அது சமயம் 'மக்கள் முன்னேற்றம்' என்பது பற்றி ஈரோடு 'குடி அரசு' பத்திராதிபர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களும் 'ஜாதியின் தற்கால நிலைமை' என்பது பற்றி திருச்சி திரு. டி. ஆர். சுந்தரம்பிள்ளை அவர்களும் 'நமது மூட பழக்கவழக்கங்கள் என்பது பற்றி தமிழ் நாட்டுச் சுயமரியாதைத் தொண்டர் பட்டுக்கோட்டை ஸ்ரீமான் அழகர்சாமி நாயுடவர்களும் சொற் பொழிவு நிகழ்த்துவார்கள். இவ்விழாக்களுக்கு அன்பர்கள் விஜயம் செய்து இச்சமயத்தைச் சிறப்புறச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

பி. எம். பொன்னுசாமி. காரியதரிசி.

### மண்ணுலகை நீத்தார்.

காங்கயம் தமிழ் சங்கவித்வான் அஷ்டாவதானம் சி. வி. சேஷாசல நாயுடு அவர்கள் முத்தகுமாரர் கவிராயர் சிட்டாகுருசாமி நாயுடு அவர்கள் 12—12—27 தேதி காலை 3 மணிக்கு காங்கயத்தில் தமது இல்லத்தில் மண்ணுலகை நீத்தார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துள்ள பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ மார்கழி 3-உ

## எதிர்பார்த்த எதிர்ப்புகள்.

I

நாம் சில காலமாக எதிர் பார்த்திருந்தபடியே நமது தொண்டிற்கு ஸ்ரீமான்கள் வரதராஜுலுவும் கல்யாண சுந்தர முதலியாரும் வெளிப்படையாய் வந்து எதிர்க்கின்று விட்டார்கள். இனி இதில் இரகசியம் ஒன்றும் இல்லை. இவர்களை மூடி மூடி வைத்து எவ்வளவு தூரம் சரிப்படுத்த பார்க்கலாம் என்று நினைத்தோமோ அவ்வளவுக்கவ்வளவு அஸ்திவாரத்துடன் எதிர்க்க சவுகரியம் செய்துகொண்டு ஆரம்பித்து விட்டார்கள்.

ஸ்ரீ வரதராஜுலு வழக்கம்போல் ஒரு கொள்கையும் இல்லாமல் வாயில் வந்த வார்த்தைகளை உளறிக்கொண்டு தேசியம் என்கின்ற ஆயுதத்தின் மூலமாய் மறுபடியும் வெளியாய் விட்டார். ஸ்ரீ முதலியார், அவருக்கு ஆண்ணனாய் சமயம்சீர்திருத்தம் என்னும் ஆயுதத்தைக்கொண்டு வெளியாய் விட்டார். எனவே இவைகளுக்கு பதில் சொல்லித்தீர வேண்டியது நமது கடமையாய்ப் போய்விட்டது. இருவரும் தாங்கள் ஆத்திரப்படும் விஷயம் இன்னது என்பதைக் குறிப்பிடாமலும், நமது பெயரையும் நமது பத்திரிகையின் பெயரையும் நாம்என்னசொல்கின்றோம் என்பதையும் குறிப்பிடாமலும், நமக்கும் நாம் எழுதினவைகளுக்கும் தாங்கள் என்ன சமாதானம் சொல்லுகிறார்கள் என்பதைக் குறிப்பிடாமலும், ஜாடை பேசும் குணத்தை மாத்திரம் கையாண்டு வருகிறார்கள். வரதராஜுலுவின் குட்டிக்கரண விஷயமாயும் அவர் அய்யங்காரானதையும் வெளிப்படையாய் சென்ற வாரம் விவரமாய்க்குறிப்பிட்டோம். அதில்ஒன்றுக்காவது ஒழுங்கான பதில் இல்லை. மறுக்கவும் இல்லை. அன்றியும் அவர் இப்போது விளம்பரமடையப் பிடித்திருக்கும் சாயல் கமிஷன் பஹிஷ்காரப் புரட்டையும் புட்டுப் புட்டு வெளியாக்கினோம்.

அவைகளிலும் ஒன்றுக்காவது பதில் இல்லை. ஆனால் என்னபதில் என்றால், வெகு பயங்காளித்தனத்துடன் சந்துகளிலும் பொந்துகளிலும் முட்டாள்கள் என்றும் இழிகுணத்தவர்கள் என்றும் எழுதுவதுடன் தனக்குள்ள ஆத்திரத்தை மாத்திரம் கொட்டிவிட்டு அய்யங்கார் அடிமையாகப் பார்க்கிறார். ஸ்ரீ முதலியாரோ தனது கல்வி பழக்கம் ஒழுக்கம், ஆராய்ச்சி, என்பவைகள் இவ்வளவையும் அடியோடு மறந்துவிட்டு "கயமை" "இழிதுறை" என்கின்ற பேச்சை கட்டிக்கொண்டு பார்ப்பனர்களை அபயம் கொள்ளுகிறார். இவ்விருவரின் நிலைமைக்கும் இரங்குகின்றோம்! இரங்குகின்றோம்! இருவரும் நம்மைக்குற்றம் கூறும் தத்துவம் முடிவில் ஒன்றேதான். அதாவது "ஜாதி மத வேற்றுமைகளை கிளப்பி விட்டு தலைவர் பட்டம் சூட்டி தாண்டவமாடும் முட்டாள்கள்" என்று ஒருவரும், "இயற்கை நோக்கை உணரும் அறிவாற்றல் வாய்க்கப்பெறாத...........சிலரால் நிகழ்த்தப்பெறும் சீர்திருத்தத்தால் உலகில் அமைதி இன்மையும் பிறவும் ஏற்படும்" என்று மற்றொருவரும்எழுதுவதின்மூலம் எதிரிகளுக்கு நம்மைக் காட்டிக்கொடுக்க வேண்டும் என்பதுதான். இப்படி இவர்கள் நம்மைக் காட்டிக்கொடுப்பதன்மூலம் பார்ப்பனர்களை தஞ்சமடைய கருதுவதுதான் இவர்களது தற்கால தொண்டின் தன்மையாய் முடிந்து விட்டது. மற்றபடி இவர்கள் உண்மையிலேயே பொது நலத்தில் கவலைகொண்டவர்களானால் இன்னார் இன்னது சொல்கின்றார், இன்ன பத்திரிகை இன்னபடி எழுதுகின்றது, அதனால் இன்னது நடந்து விட்டது என்று சொல்லி இவ்வளவு ஆத்திரப்பட்டார்களானால் அதில் மனிதத்தன்மை உண்டு. பெயரையும்பத்திரிகையையும்வெளியிடுவதிலும்கூட பயந்துகொண்டு, இவர்களை குற்றம் சொல்லும் பத்திரிகையையும் ஆசாமியையும் அறிந்தால் அதன் மூலம் தங்கள் யோக்கியதையின் உண்மை வெளியாகிவிடுமோ என அஞ்சி, பொதுவாக யாரையோ பேசுவதுபோல் பேசுகின்றார்கள். இதிலிருந்தே இவர்களது நிலைமை விளங்கலாம்.

நிற்க, 'தமிழ்நாடு' டிசம்பர் 14-ந்தேதி பத்திரிகையில்

"சர்க்கார் தயவை சம்பாதிக்கவோ வயிற்றுப் பாட்டிற்காகவோ ஜாதிமத வேற்றுமைகளை கிளப்பி விட்டு தாண்டவமாடும் முட்டாள்களுக்கு அமீர் உபதேசம் ஆலகால விஷம்போல் தோன்றலாம்" என்று எழுதியிருக்கின்றார். அதிலேயே பிறிதோரிடத்தில்

"தென்னாட்டில் இரண்டொரு பிராமணரல்லாதார் தேசியத்தையும் தேச பக்தர்களையும் தாக்கி என்னதான் வசை புராணம் பாடினாலும்காட்டிவிட்டகூச்சலாகவேமுடியும்' என்கின்றார்.

இதில் "ஜாதி மத வேற்றுமைகளை கிளப்பிவிட்டு தாண்டவமாடும் முட்டாள்கள்" யார்யார் எதனால் முட்டாள்கள் ஆனார்கள் என்றும் நாம் கேட்கின்றோம். ஜாதி மத வித்தியாசத்தை ஏற்படுத்தினவர்களா அல்லது அதை அழிக்கவேண்டும் என்று மண்டையை உடைத்துக்கொள்ளுகின்றவர்களா? அல்லது திருத்தத்திற்குகுறுக்கே நிற்பவர்களா? அன்றியும் அவைகள் ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்று கேட்கின்றோம். ஜாதி, மத பேதம் கிளப்புவதாகவும் இதனால் வயிறு பிழைப்பதாகவும் இவர் யாருடைய எந்த வாக்கியத்தில் கண்டார். அப்படிக் கண்டதற்கு என்னசமாதானம் சொல்லி இந்தபுத்திசாலி அவர்களை கண்டிக்கிறார்என்று கேட்கின்றோம். ஆகவே அவைகளைகுறிப்பிடாமலும், சமாதானம் சொல்லாமலும்பாமர மக்களை ஏமாற்ற இம்மாதிரி விஷமம்செய்து காரியத்தைக் கெடுத்து எதிரியின் காலுக்குள் நுழைவது யோக்கியமானதா அயோக்கியமானதா என்றுகேட்கின்றோம். முட்டாள்த்தனம் என்பது அநேகமாய் மன்னிக்கக்கூடியதாகிவிடும். அயோக்யதனத்தை மன்னிக்கமுடியுமா? தேசியத்தையும், தேச பக்தர்களையும் இரண்டொரு பிராமணரல்லாதார் வைகிறார்கள் என்பதில் எந்த தேசியத்தை, எந்த தேச பக்தரை, எந்த பிராமணரல்லாதார் எப்படி வைதார் என்பதை இப்போதாவது சொல்லட்டும். அதைச்சொல்ல தைரியமில்லாதவர்கள் முக்காடிட்டு மூலையில் உட்கார்ந்து கொண்டு ஒப்பாரியிட்டு அழுவதில் பயனென்? யோக்கியமும், தைரியமும், மனிதத்தன்மையும் இருந்தால் தைரியமாய் வெளியில் வந்து விஷயங்களைச்சொல்லி வாதாடி மக்களிடைமெய்ப்பிக்கட்டும். அப்போது நாம்சந்தோஷமாகபின்பற்றத்தயாராயிருக்கின்றோம். அஃதில்லாமல் இம்மாதிரி விஷமத்தனம் செய்யும் காரியங்களை ஒருக்காலும் விட்டுவைக்க முடியாததற்கு வருந்துகின்றோம்.

பஹிஷ்காரத்தைப் பற்றி "குடி அரசில்" நாம் சுமார் 5, 6 தலையங்கங்கள் எழுதியும் பலவிடங்கள் 10, 12 உபந்நியாசங்களில் செய்துமிருக்கிறோம். அவற்றுள்எதற்காகவாவது எந்த பத்திரிகையாவது எந்த தலைவர்களாவது பதில் சொன்னார்களா? என்று கேட்கின்றோம். நாமும் நமது பத்திரிகையும் பதில் சொல்லக்கூடிய யோக்கியதை உடையவைகள் அல்ல என்று கருதியதாக சொல்லப்படுமானால் அலக்ஷியம் செய்து விட்டு பேசாமல் வாயை மூடிக்கொண்டு வேறு வேலை பார்க்க வேண்டுமே யல்லாமல் ஜாடையாக நம்மைப்பற்றி வயிற்றுச் சோற்றுக்காரர், சுயநலக்காரர், உத்தியோக ஆசை பிடித்தவர்கள், சர்க்கார் மனுஷர்கள் என்பதான அற்பத்தனமான வார்த்தைகளை ஏன் உபயோகப்படுத்த வேண்டும் என்று கேட்கின்றோம். இம் மாதிரி நடந்து தீர வேண்டிய ஒரு அவசியம் வந்தவர்கள் வயிற்றுச் சோற்றுக்காரர்கள் முதலியவர்களாயிருக்கக்கூடுமா அல்லதுஉண்மைஎன்று பட்டதை எழுதுகிறவர்களும் பேசுகிறவர்களும் வயிற்றுச்சோற்றுக்காரர்களாய் இருக்கமுடியுமா? என்பதை பொது மக்களேயோசித்துப் பார்க்கட்டும். தற்கால நிலையில் சுயமரியாதைக்கென்றோ தேசத்தின் நன்மைக்கென்றோ சாயல கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று இசான்

லுகின்றவர்கள் யோக்யர்கள் என்றும் அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் கடவுள் சொல்வதானாலும் அதை ஒன்று மூட்டாள்தனமென்றோ இல்லாவிட்டால் அயோக்கியத்தனமென்றோ தான் சொல்லத் தயாராயிருக்கின்றோம் கல்லிலும் எழுதத் தயாராயிருக்கின்றோம். காரணங்கள் 'குடி அரசில்' ஒன்றரை மாத காலமாய் காட்டி வந்திருக்கின்றோம். இனியும் கேட்டால் சொல்லத் தயாராயிருக்கின்றோம். சுயமரியாதையும் தேசாபிமானமும் ராயல் கமிஷன் பகிஷ்காரத்தில் இல்லை. இருப்பதாக சொல்லவருவார்களானால் இதைவிட அதிகமாகவும் கவனிக்கவேண்டியதாயுமிருக்கின்ற இடத்தை இக்கூட்டத்தார் கவனிக்காமல் மறைத்து வைத்துக்கொண்டு பித்தலாட்டங்கள் செய்து வேண்டுமென்றே மக்களை ஏமாற்றிப்பிழைக்கின்றார்கள். அந்த பித்தலாட்டங்கள் தான் இதை கொண்டு வந்து விட்டிருக்கின்றது. ராயல் கமிஷன் நியமனத்தினால் தங்கள் சுயமரியாதையை இழந்துவிட்டதாகக் கருதிக்கொள்ளும் மக்கள் தேசத்தில் மிகச்சிலரேயாவர். பல ஆண்டுகளாக வேறுபல வழிகளில் சுயமரியாதையை இழந்து தவிக்கும் ஜனங்கள் கோடிக்கணக்காக இருக்கிறார்கள். எனவே இக்கோடிக்கணக்கான மக்களுக்கு சுயமரியாதை தேடிக்கொடுப்பதுதான் உண்மை தேசியமாகும்.

இனி சீர்திருத்தத்தைப் பற்றி உபதேசம் செய்யும் ஸ்ரீ முதலியாரைப் பற்றி யோசிப்போம். இதுவும் அதே டிசம்பர் 14ந் தேதி 'நவ சக்தி'யில் கண்டதையே குறித்து சமாதானம் சொல்லுகின்றோம். இருவரும் ஒருமித்து இக்கருமம் ஏற்றார்களா என்று சந்தேகப் பட வேண்டியதானாலும் நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. சீர்திருத்தத்தைப் பற்றி உபதேசம் செய்ய முன் வந்தவர்கள் தங்களது சீர் திருத்தம் இன்னது என்றும் அதற்காகத்தான் இன்னது செய்து வந்திருக்கிறேன் என்றும் குறிப்பிட்டுவிட்டு மற்றவர்களைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ முன் வரட்டும். அதில்லாமல் எவராவது ஏதாவது செய்தால் அதைக் குறுக்கிட வருவது எப்படி யோக்கியமாகும். தவிர மேற்படி தேதி 'நவசக்தி' தலையங்கத்தின் இறுதியில் "இன்று பொது முறை பற்றி எழுதலானோம். சிறப்பு முறை பற்றி சமயம் நேர்ந்துழி எழுதுவோம்" என்று குறிப்பிட்டிருக்கின்றது. ஆதலால் அதை விரைவில் எதிர் பார்க்கின்றோம். இப்பொழுது எழுதியிருப்பது வழவழவென்று "வெண்டைக்காய் குழம்பு" போல் இருக்கின்றதேயல்லாமல் குறிப்பு இல்லை. ஆனாலும் அதற்கும் சமாதானம் சொல்லுவோம். பொதுவாக மக்கள் சீர்திருத்தம் சமய சீர்திருத்தம் என்பவற்றுள் நாம் தற்காலம் ஆசைப் படுவது மக்கள் சீர்திருத்தமேயொழிய எவ்வித சமய சீர்திருத்தமுமல்லவென்பதையும், இம்மக்கள் சீர்திருத்தத்திற்கு இடையூறாய் இருக்கும் எந்த சமயமோ சமூகமோ திருத்தவோ அழியவோ நேரிடக்கூடுமானால் அதைப் பற்றி யாம் கொஞ்சமும் பின்வாங்கப்போவதில்லை என்பதையும் நம்மை எதிர்ப்போர்கள் உணர வேண்டுகின்றோம். மக்களுக்காக சமயமே ஒழிய சமயத்திற்காக மக்களல்ல என்பதே நமது முடிவு. ஆகவே நம்முடைய இம்முயற்சிக்கு பாமர மக்களின் அறியாமையால் ஏற்படும் எவ்வித இடையூறையும் பொறுமையுடன் ஏற்று சமாளிக்க எப்போதுமே தயாராயிருக்கின்றோம். ஆனால் சமயங்களின் பேரால் என்று சொல்லிக்கொண்டு பண்டிதர்கள் என்றும், ஆராய்ச்சிக்காரர்கள் என்றும், சமயவாதிகள் என்றும், சமய ஆச்சாரியர்கள் என்றும் சொல்லிக்கொண்டு வரும் எதிர்ப்புகளுக்கு ஒரு சிறிதும் பொறுமை காட்ட இணங்கோம் என்பதை அவரவர்கள் உணரட்டும். ஏனெனில் காலம் போதாது. அன்றியும் இக்கூட்டங்களே தான் இப்போது நமது நாட்டு மக்களின் உண்மை விடுதலைக்கு எமனாய் இருப்பவைகள் இருந்தும் வந்தவைகள் என்பது நமது அபிப்பிராயம். உண்மையான சீர்திருத்தங்கள் தோன்றும் போது இக்கூட்டத்திற்குத்தான் முதல் முதல் ஆபத்து வரும். ஏனெனில் அப்படிச் செய்த நாடுதான் இன்று பரிபூரண விடுதலையடையும் வழியில் போய்க்கொண்டிருக்கின்றது. ருஷியாவில் பாதிரிகளை தூக்கில் போட்ட பிறகே அந்நாடு இன்று உயர்வு தாழ்வு, முதலாளி தொழிலாளி என்ற வித்தியாசம் இல்லாத நிலைக்கு போய்க்கொண்டிருக்கின்றது. சீர்திருத்தக்காரனுக்கு முக்கியமாய் அறிவு வேண்டுமே ஒழிய ஆராய்ச்சி வேண்டியதில்லை. சமயம் என்பதை எந்த அர்த்தத்தில் 'நவசக்தி' உபயோகப்படுத்துகின்றது என்பது நமக்கு விளங்காமையால் நாம் இப்போது அதைப்பற்றி எழுத முடியவில்லை. ஆனால் நம்மிடம் கோபமும் வெறுப்பும் இருப்பதாகவும் இதனால் கேடு வருமென்றும் அது எச்சரிக்கை செய்கின்றது. இதை நாம் ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை. ஏனெனில் 'உலக மக்களுக்கு கோபமும் வெறுப்பும் மனித இயற்கை என்பதை முதலியார் அறியட்டும். அஃதில்லாதவன் மனிதனல்ல என்பதையும் மனிதனுக்கு அது அவசியம் வேண்டுமென்பதையும் ஸ்ரீ முதலியார் உணரட்டும். அன்றியும் தான் உள்பட இன்ன மனிதனிடத்தில் கோபமும் வெருப்பும் இருந்ததில்லை என்றாவது அல்லது முதலியாரின் சமயத்தின் பேரால் காணும் இன்ன தெய்வத்தினிடம் கோபமும் வெருப்பும் இருந்ததில்லை என்றாவது ஸ்ரீமான் முதலியார் எடுத்துக் காட்டட்டும். அஃதின்றி வீணே நம்மைக் காட்டிக் கொடுப்பதற்கும் சில பார்ப்பனர்களுக்கு தான் நல்ல பிள்ளை ஆவதற்கும் மாத்திரம் இதைச் சொல்லி குற்றம் சுமத்தப் பார்ப்பது நேர்மையல்லவென்றே சொல்லுவோம். மனிதத் தன்மையும் பகுத்தறிவும் உடையவன் அன்பு காட்ட வேண்டிய இடத்தில் அன்பும், கோபம் காட்டவேண்டிய இடத்தில் கோபமும், விருப்பு காட்டவேண்டிய இடத்தில் விருப்பும், வெறுப்பு காட்ட வேண்டிய இடத்தில் வெறுப்பும் காட்டித்தான் தீரவேண்டும். இது இயற்கை. உதாரணமாக எவ்வளவு பசியோடிருப்பவனானாலும் அவனுக்கு சகலவித பலகார பக்ஷணங்களை இலையில் பரிமாறி உட்கார வைத்து அவ்விலையின் ஒரு மூலையில் கழற்சிக்காயளவு மலம் வைத்தால் வைத்தவனிடம் கோபமும் மலத்தினிடம் வெறுப்பும் உண்டாகாதா என்று கேட்கின்றோம். மனிதனுடைய ஒவ்வொரு அவயவங்களுக்கும் கோபமும் வெறுப்பும் இருப்பது ஸ்ரீ முதலியார் அறியாரா என்று கேட்கின்றோம். மூக்கு நல்ல வாசனையை எப்படி முகர்கின்றது, துர்வாசனையை எப்படி வெறுக்கின்றது. இதுபோல் ஒவ்வொரு அவயவத்தையும் கவனித்துப்பார்க்கட்டும் என்று வேண்டுகின்றோம்.

ஸ்ரீமான் முதலியார் நாம் இன்ன இடத்தில் உபயோகித்த கோபமும் வெறுப்பும் கூடாது என்று சொல்ல முன்வராமல் அவ்வார்த்தையைச் சொல்வதால் உலகத்தை ஏமாற்றலாம் என்கின்ற கருத்துக் கொண்டு பழி சுமத்த வந்தது யோக்கியமா என்று மறுபடியும் கேட்கின்றோம். அன்றியும் ஸ்ரீ முதலியாரும் யோக்கியமான எண்ணத்துடன் கண்டிக்கப் புறப்பட்டால் அவர் கண்டனங்களுக்கு நாம் சொல்லும் குறிப்புகளை தனது பத்திரிகையில் போட முன் வரட்டும். அப்படிக்கில்லாமல் அன்னிபருக்கு கையாளாய் இருந்துகொண்டு வெறும் எதிர்ப்பு வேலைகளை மாத்திரம் முறை தவறிய வழியில் ஆற்ற முன்னிற்பது அழகாகுமா? என்று கேட்கின்றோம். நியாயமான எதிர்ப்புகளை மனப்பூர்வமாய் வரவேற்கின்றோம்.

குரானையும் ஒதுக்கி உண்மையைக் கடைபிடிக்கும் கமால் பாக்ஷா வீரனையும், முல்லாக்களையும் ஒதுக்கி சமத்துவத்தைக் காண விரும்பும் அமீர் வீரனையும், பாதிரிகளை தூக்கிலிட்டு சுதந்திர மளிக்கும் ருஷிய வீரனையும் கண்ட பிறகு அழுக்கு மூட்டைகளுக்கு பேச வாயேது என்று கேட்கின்றோம்.

காந்தி அடிகள் என்றும், மகாத்மா என்றும் இவர்களால் தற்காப்புக்காகக் கொண்டாடப்பட்ட ஸ்ரீமான் காந்தி அவர்களை ஒரு சமயம் என்ன சொன்னார் என்றால் ஒரு சமயம் ஒரு இந்து என்பவன் தன்னுடைய மனைவியை ஒரு மகமதியன் தன் எதிரில் கற்பழித்து விட்டதாக வேதனைப் பட்டு வந்து தன்னிடம் பிராது சொல்லும்போது அவர் அளித்தபதில் என்னவென்றால், "அடபாவி இதைவந்து சொல்லும்வரை உனக்கு உயிர்வைத்திருக்க இஷ்டம் இருந்ததா" என்று தான் கேட்டாராம். இதன் கருத்து என்ன? தற்கொலை செய்து கொள்ளச்சொன்னாரா என்றால் இல்லவே இல்லை. மற்றென்னவென்றால் அங்கேயே உன் மனைவியை கற்பழித்த கொடியவன் மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவனைக் கொன்று இருக்கவேண்டும், அப்படிக்கில்லாத பட்சம் அம்முயற்சியில் உன் உயிரை இழந்திருக்கவேண்டும் என்பது தான் அதன் அர்த்தம். இந்நிலையில் காய்தல், உவத்தல், முனிதல், எரிதல், ஆகியவைகள் கூடாது என்பது போன்றதெல்லாம் எங்கே போயிற்று என்று கேட்கின்றோம்.

முடிவாய் ஒன்று சொல்லுகின்றோம். உண்மைச் சீர்திருத்தமும், சமத்துவமும், ஏற்பட்டு மக்கள் ஒன்றுபடவேண்டுமானால் மதம், சமயம், வேதம், புராணம் என்கின்ற

அழுக்கு மூட்டைகள் ஒழியவேண்டும். அவைகளை தூக்கித்திரிந்துகொண்டிருக்கும்வரை ஒருக்காலமும் வெற்றி யடையமுடியாது.

எப்படியோ பல மதங்கள், பல சமயங்கள், பல வேதங்கள், பல தெய்வங்கள் கற்பிக்கப்பட்டாய் விட்டது. அவைகள் ஒவ்வொன்றினும் மக்களை அடிமைப் படுத்தியாய் விட்டது. குரங்குப் பிடியாய் இவற்றைப் பிடித்துக்கொண்டு சமயஞானம்பேசுகிறவர்களிடம் காலத்தைக் கழிப்பது வீண்வேலையே யாகும். மக்கள் மிருகப்பிராயத்திற்குப் போய்க்கொண்டே இருக்கின்றார்கள். மண்ணையும், சாம்பலையும் குழைத்து பூசிக்கொள்வதே சமயமாய் விட்டது.

பார்ப்பானுக்கும் பாஷாண்டிக்கும் அழுவதேதர்மமாகி விட்டது.

கூடாவொழுக்கங்களும் அண்டப் புரட்டுகளும், ஆகாயப் புரட்டுகளும் நிறைந்த புராணக் குப்பைகளை திருப்பித் திருப்பிப் படிப்பதே காலட்சேபமாய் விட்டது.

அன்புமயமான உண்மைக்கடவுளை அடியோடு மறந்தாய் விட்டது.

ஒழுக்கத்தினிடத்திலும், சத்தியத்தினிடத்திலும் மக்களுக்குள்ள கவலையே அடியோடு நீங்கிவிட்டது.

வலிவுள்ளவன் வலிவில்லாதவனை இம்சிப்பதே தர்மமாய் விட்டது.

பணக்காரன் ஏழைகளை அடிமைப்படுத்துவதே முறையாய் விட்டது.

தந்திரசாலிகள் சாதுக்களை ஏய்ப்பதே வழக்கமாய் விட்டது.

அயோக்கியர்கள் யோக்கியர்களை உபத்திரவப் படுத்துவதே நீதியாகி விட்டது.

வலிவுள்ளவனாகவோ, பணக்காரனாகவோ? தந்திரசாலியாகவோ, அயோக்கியனாகவோ இல்லாதவன் வாழ்வதற்கு உலகத்தில் இடமே இல்லாமல் போய் விட்டது.

இவைகளைச் சீர்திருத்தக் காலத்தை எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமா? இதனால் கலகம் உண்டாவதானால் அதற்குப் பின்வாங்கவேண்டுமா? யாராவது மதம், சமயம், புராணம், சாஸ்திரம், தேவாரம், திருவாசகம், பிரபந்தம் என்கிற நிழலில் போய் ஒளிந்துகொண்டு எதிர்ப்பாரானால் அதற்காக பயந்து கொண்டு ஓட வேண்டுமா என்று கேட்கிறோம்.

அக்காலம் மலையேறிவிட்டது என்பதை ஸ்ரீமுதலியார் நன்றாய் உணரட்டும். பாட்டிகதை இனி பலிக்காது என்பதை முதலியார் கூட்டங்கள் நன்றாய் அறியட்டும், இருக்கினால் இருந்தட்டும இல்லாவிட்டால் அழியட்டும் எனகின்ற இரண்டிலொரு கொள்கையிலேதான் இறங்கி யிருக்கின்றோம். மானங்கெட்ட மத்திய வாழ்வு இனி வேண்டியதில்லை. ராஜி பேசுவதற்கும் இதில் இடம் இல்லை.

கண்ணியமாய் குறிப்பாக வரும் எதிர்ப்புகளை ஆவலோடும், பணிவோடும் வரவேற்று சமாதானம் சொல்ல முயலுகின்றோம்,

## முடியுமா?

இவ்வருஷம் நடைபெறப் போகும் காங்கிரஸ் மகாநாட்டில் காங்கிரஸ் கொள்கையில் ஒரு திருத்தம் செய்யவேண்டும் என்பதாக சேலம் மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அதன் கருத்தாவது:—

“இந்திய சமூக வளர்ச்சிக்கும் சுயராஜ்யம் விரைவில் பெறுதற்கும் ஜாதி வித்தியாசம் முதலிய சமூக ஊழல்கள் விரோதமாயிருப்பதால் அவற்றையும் ஒழிப்பது காங்கிரசின் முக்கிய கொள்கையாக இருக்க வேண்டும். இது அடுத்த காங்கிரசில் திருத்தப்படவேண்டும்” என்பதே.

ஆகையால் இத்தீர்மானங்களை பிரேரேபிக்கவேண்டும் என்பதாக ஸ்ரீ ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அவர்களை பலர் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அவரும் ஆகட்டும் என்று வாக்களித்திருக்கின்றார். ஆனால் அவர் இவ்வருஷம் எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு தெரிந்தெடுக்கப்பட்டால்தான் இதை பிரேரேபிக்க முடியும். இந்த உளவு தெரிந்த பார்ப்பனர்கள் கண்டிப்பாய் இவ்விஷயத்தில் சூழ்ச்சி செய்வதாயிருந்தாலும் பார்ப்பனரல்லாத மாகாணக் கமிட்டி மெம்பர்களாவது அவரை தெரிந்தெடுத்து இந்த விஷயத்தைப்பற்றி பேசவாவது சந்தர்ப்பம் அளிப்பார்களா என்பது உறுதி சொல்ல முடியாததாகவே இருக்கிறது.

## கோவையிலும் ஈரோட்டிலும்.

நிகழும் டிசம்பர் மாதம் 14 தேதி கோவையில் முனிசிபல் கௌன்சிலர் ஸ்ரீமான் பழனிசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் ஸ்ரீமான் நாயக்கரவர்கள் ராயல் கமிஷன் பகிஷ்காரப் புரட்டைப் பற்றி ஒரு அரிய உபந்யாசம் செய்தார்கள். சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் குழுமி உண்மையுணர்ந்து ஆனந்த மடைந்தனர்.

17 தேதி மாலை 6 மணிக்குமேல் ஈரோடு அலி சவுக்கத்தில் அகில பாரத சர்க்கா சங்க காரிய தரிசி ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் தலைமையில் ஷை பகிஷ்காரப் புரட்டைப் பற்றி ஸ்ரீமான் நாயக்கரும், “சமூக சீர்திருத்தம்” என்னும் விஷயமாய் சுயமரியாதைத் தொண்டர் பட்டுக்கோட்டை ஸ்ரீமான் அழகர்சாமி நாயுடு அவர்களும் இரண்டரைமணி நேரம் அழகான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கூட்டம் கூட்டத் தகுந்த முன்னேற்பாடுகள் ஒன்றும் செய்யாதிருந்தும், கூட்டம் கூட்டின காலமும் இடமும் தகுந்த வசதியற்றதாயிருந்தும் சுமார் 1000 பேர் விஜயம் செய்திருந்ததும் அதிலும் பெரும்பான்மையோர் நின்றுகொண்டே பிரசங்கங்கள் முழுதையும் கவனமாய் கேட்டதும் மிகவும் குறிப்பிடத் தக்கது.

## முக்கிய குறிப்பு.

ஐகோர்ட்டு வக்கீலும், மேல்நாட்டு கீழ்நாட்டு பாஷா விற்பன்னரும், சிலாசாசன, சரித்திர, ஆராய்ச்சியாளருமான ஸ்ரீமான் கோவை C. M, இராமச்சந்திர செட்டியார் B. A., B. L., அவர்கள் மக்களின் தற்கால உணர்ச்சியை அறிந்து “ஆலயப்பிரவேசம்” “ஆலயவழிபாடு” “ஆலய பூஜை” “ஆலய ஒழுக்கம்” “ஆலயமேற்பார்வை” முதலியவைகளைப்பற்றி தனித்தனியாகவும், கோவில்பட்டி ஸ்ரீமான் சந்திரசேகரப்பாவலர் அவர்கள் ‘இதிகாசம்’ என்கின்ற தலைப்பில் புராணங்களின் யோக்கியதைகளைப்பற்றி குறிப்பாய் ராமாயணத்தைப்பற்றி பொது மக்கள் நன்மையை உத்தேசித்து “குடி அரசு” மூலமாக தொடர்ச்சியாக பிரசுரிப்பதற்கு கட்டுரைகள் உதவுவதாக வாக்களித்திருக்கிறார்கள். நாமும் அவைகளை அன்புடனும் வந்தனத்துடனும் ஏற்று அடுத்த இதழ் முதற்கொண்டு பிரசுரித்துவர உத்தேசித்துள்ளோம். ஆதலால் “குடி அரசு” விரிவடைந்து இனி 20 பக்கங்கள் கொண்டதாக வெளிவரும். அபிமானிகள் கவனித்து அவற்றைப்படித்து வரவேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

## பகிஷ்காரத்திற்கு எதிர்ப்பிரசாரம்.

ராயல் கமிஷன் பகிஷ்காரம் என்கின்ற புரட்டை வெளியாக்கி மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்ல தமிழ்நாட்டில் பிரசாரம் செய்யவும், துண்டுப் பிரசுரம் வழங்கவும் ஒரு கமிட்டி நியமிக்கப்படும். அதில் கலந்துகொள்ள இஷ்டமுள்ள கனவான்கள் தங்களுடைய பெயரை ஈண்டு ‘குடி அரசு’ ஆபீசுக்காவது மாயவரம் ரங்கவிலாஸ் ஸ்ரீமான் ஆர். சின்னையா பிள்ளை அவர்களுக்காவது தெரிவிக்க வேண்டுகிறோம்.

## மைடான் டில்லி.

“அருணகிரி” ஆசிரியர் திரு. சி. ரா. ம. ராமநாதன் அவர்கள் உபந்யாசம்:— ஐக்கிய இந்திய சங்கக் கூட்டம் 29—11—27ல் க. ரு. கு. ம. அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அவ்வமயம் திரளாக ஜனங்கள் குழுமினர். திரு க. ரு. கு. ம. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார். “வள்ளுவரும் வாசுகியும்” என்ற தலைப்புடன் திரு. ராமநாதன் அவர்கள் சுமார் 45 நிமிஷங்கள் வள்ளுவர் பிறப்பைப் பற்றியும் வாசுகினாலேயே வள்ளுவர் பிரகாசித்தாரென்றும், இவரது நூல் மட்டும் எல்லா மொழிகளிலும் பெயர்க்கப் பெற்றதற்குக் காரணம் சாதி சமய பேதமின்றி நேர்மையான முறையில் இயற்றப்பட்ட தென்றும் சொற்பொழி வாற்றினார்கள். அவைத் தலைவர் அவ்வுபந்யாசத்தைப் பற்றியும், அருணகிரியின் அபிவிருத்தியைப் பற்றியும் சில உரைகள் பகர்ந்தார்கள். பின் காரியதரிசியால் வந்தனம் கூறப்பெற்று அவை இனிது நிறைவேறியது.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டரும் செல்வவந்தரும் ஒத்துழையாமையின் போது முன்னின்று உழைத்தவருமான ஸ்ரீ செல்வப் பெருமாள் நாடார் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக்கொள்ள அவரும் இணங்க அவரது தலைமையில் மகாநாடு ஆரம்பிக்கப் பட்டது. முதலாவதாக லால்குடி தாலூக்கா சுயமரியாதைச் சங்கத்தாரால் ஒரு நீண்ட உபசார பத்திரம் கவிகளுடன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. செல்வக் கணபதி செட்டியார் அவர்களாலும் பூவாளூர் முத்துராஜ மகாஜன சங்கத்தாரால் ஒரு உபசாரப் பத்திரம் காரிய தரிசியாலும் வாசித்துக் கொடுக்கப் பட்டன. நாயக்கர் பேரில் சில கவிகளும் பாடப்பட்டு பெரிய கரகோஷத்தினிடையே நாயக்கருக்கு மாலையிட்டு ஜே! சப்தம் முழங்கியது. இந்த சமயம் கூட்டத்தில் ஏற்பட்ட உணர்ச்சியை நேரில் பார்த்தவர்கள்தான் சரியாய் உணரக்கூடும்.

பிறகு நாயக்கர் எழுந்து தனக்கும் தனது சகாக்களுக்கும் செய்த உபசாரங்களுக்கும் வாசித்து கொடுத்த வரவேற்புப் பத்திரிக்கைகளுக்கும் தான் ஒரு சிறிதும் தகாதவன் என்கின்ற முறையில் சில வார்த்தைகள் சொல்லிவிட்டு தனது உபன்யாசத்தை ஆரம்பித்தார். சுமார் மூன்று மணி நேரம் மக்கள் பரவசப்பட்டு ஆண்களும் பெண்களும் நிலை பிரியாமல் ஒவ்வொரு வார்த்தையையும் குறிப்பாய் கேட்டு நெஞ்சத்தில் அழுத்திக்கொண்ட குறியை காட்டிக்கொண்டே இருந்தார்கள். கூட்ட முடிவில் திருச்சி ஸ்ரீமான் கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை அவர்கள் நாயக்கரை ஒட்டி சில வார்த்தைகளுடன் வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் எட்டரை மணிக்கு இனிது முடிந்தது.

கூட்டம் முடிந்ததும் லால்குடி வாலிபர்கள் பலர் காலையில் லால்குடியில் கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்திருக்கின்றதென்றும் அவசியம் யாவரும் வரவேண்டுமென்றும் சொல்ல ஸ்ரீமான் நாயக்கர் தனது உடல் நிலையைப்பற்றி எவ்வளவோ கேட்டுக்கொண்டும் ஒரே பிடிவாதமாய் ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

## லால் குடி.

மறுநாள் காலையில 6 மணிக்கு தனி மோட்டாரில் ஸ்ரீமான் நாயக்கரும் கோஷ்டியும் லால் குடிக்கு செல்ல அங்கு ஸ்ரீ பெத்தயா அவர்கள் ஜாகையில் சிற்றுண்டி நடந்தவுடன் மேள வாத்தியங்களுடன் கடை வீதியில் கூட்டம்கூட ஏற்பாடு செய்திருந்த இடத்திற்கு போய் அங்கு மகாநாடு ஆரம்பமாயிற்று. அங்கும் போலீஸ் அதிகாரிகளும் கான்ஸ்டேபில்களும் ஏராளமான ஜனங்களும் அதி காலையிலேயே கூடி இருந்தார்கள்.

திருச்சி ஸ்ரீமான் கி.ஆ.பெ. விஸ்வநாதபிள்ளை அவர்கள் தலைமையில் ஸ்ரீமான் நாய்க்கர் சுமார் 2 மணி நேரம் பேசினார், தலைவரும் தக்கபடி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். கூட்டத்தில் பார்ப்பனர்கள் அதிகம்பேர் காணப்பட்டார்கள். யாவரும் சந்தோஷத்துடனேயே நாயக்கரின் சொற்பொழிவைகவனமாய் கேட்டுக்கொண்டிருந்ததும் அநேகப்பார்ப்பனர் நாயக்கர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் ஒப்புக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. கூட்டம் முடிந்த பின்பு பார்ப்பனரல்லாத மாணவர்கள் பலர் நாயக்கரிடம் வந்து அவ்வூரிலுள்ள பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் "குடி அரசை"ப் படிக்கின்ற பையன்களிடம் வெறுப்புக் காட்டுகிறார் என்றும், 'இந்து' 'சுதேசமித்திரன்' 'தமிழ் நாடு' ஆகியவைகளைப்படி என்கின்றார்கள் என்றும் 'குடி அரசையும்' 'திராவிடனை'யும் பள்ளிக்கூடத்திற்கு கொண்டு வரக்கூடாது என்று சொல்லுகிறார்கள் என்றும் சொல்லிக் கொண்டார்கள். அவர்களுக்குப் பதில் அளிக்கையில், இந்தக் கொடுமை இங்கு மாத்திர மல்ல வென்றும் தான் போகும் ஒவ்வொரு ஊர்களிலும் இம்மாதிரி பிராதுகளும் இதிலும் கேவல மானதைகளும் கூட சொல்லக் கேட்டு வருகின்றேன் என்றும் பட்டுக்கோட்டையில் மாணவர்கள் சொல்லிக்கொண்ட சில பிராது தனக்கு மிகவும் மானக்கேடாய் கூட இருந்ததென்றும் இவைகள் அந்தந்த உபாத்தியாயர்கள் குற்றமல்லவென்றும், அந்தந்த சேர்மென், ஜில்லா போர்டு பிரசிடெண்டு பள்ளிக்கூட மனேஜர்கள் முதலியவர்களுடைய குற்றமென்றும், தான் எவ்வளவு தூரம் அவர்களுக்குச் சொல்லியும் அத்தலைவர்கள் தங்கள் வாழ்வையும் உத்தியோகநீடிப்பையும்கவனிக்கின்றார்களே ஒழிய அவர்களுக்கு இவ்விஷயத்தில் சிறிது கூட கவலை இல்லை என்றும், அவர்களுக்கு நல்ல புத்தி வரும்படி பிரார்த்திக்க வேண்டும் என்று சொன்னதோடு இம்மாதிரி சம்பவங்களை தெரிவித்தால் தன்னால் கூடியவரை முயற்சி யெடுத்து பார்ப்பதாகவும் சொல்லிக்கொண்டு அவ்வூரார்களிடம் உத்திரவு பெற்று மோட்டாரில் திருச்சிக்கு புறப்பட்டுவிட்டார்கள்.

## திருச்சி.

லால்குடியிலிருந்து திருச்சி ஸ்ரீமான் விஸ்வநாத பிள்ளை வீட்டுக்கு சுமார் 12 மணிக்கு ஸ்ரீமான் நாய்க்கர் கோஷ்டி போயச்சேர்ந்தவுடன்யாவரும் சாப்பிட்டு வந்தவர்களுக்கு எல்லாம் பேட்டி கொடுத்து பேசிக்கொண்டு இருக்கவேண்டி வந்தது. தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் தலைவர்கள் சிலர் வந்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். மணி 4-30 க்கு ஸ்ரீமான் நாயக்கரும் மற்றவர்களும் பெரியகடைவீதி வழியே டவுன் ஹாலுக்கு எதிரில் உள்ள மைதானத்தில் ஏற்படுத்தியிருந்த கூட்டத்திற்குச் சென்றார்கள். வழி நெடுக ஜனக்கூட்டம் கூடிக்கொண்டே வந்தது. முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீமான் நாராயணசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் மகாநாடு ஆரம்பித்ததும் ஸ்ரீ கலியபெருமாள் நாயுடுவால் தேசியப் பாட்டு பாடப்பட்டபின், ஸ்ரீ நாய்க்கர் பஹிஷ்காரப்புரட்டு தொழிலாளர் நிலை என்பது பற்றி 2-30 மணி நேரம் பேசினார். பிறகு மதுரை ஸ்ரீமான் ஜே. எஸ். பெரிய நாயகம் பேசினார். பிறகு நாகை ஸ்ரீ மாணிக்கதாஸ் பேசினார். பிறகு ஸ்ரீமான் கி. ஆ. பெ விஸ்வநாத பிள்ளை பேசினார். பிறகு ஸ்ரீமான் நாகை தொழிலாளர் சாமிவேல்பிள்ளை பேசினார். பிறகு பிரம்மஸ்ரீ ஞானானந்தசாமிகள் பேசினார். அடியில் கண்ட தீர்மானம் ஸ்ரீ விஸ்வநாதபிள்ளை அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ சாமிவேல் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானமாவது:—

"தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்கள் சமீபத்தில் தங்களுடைய குறைகளை முன்னிட்டு பொது வேலை நிறுத்தம் செய்யப்போவதாக வெளிட்ட அறிக்கைகளைக் கண்டு இக் கூட்டம் அநுதாபத்தைக் காட்டுவதோடு உடனே ஏஜெண்டு அவர்கள் இதில் தலையிட்டு அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் இக்கூட்டம் முடிவு செய்கிறது.

(அ) ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தாலொழிய தங்கள் குறைகளுக்கு வேறு நிவர்த்தி இல்லை யென்று நினைக்கும் படி ஏஜண்டு அவர்கள் நடந்து கொண்டதால் அவருடைய செய்கையைக் கண்டிக்க வேண்டுமென்றும் தொழிலாளர்களிடத்தில் அநுதாபமும் ஆதரவும் காட்ட வேண்டுமென்றும் இப்பொதுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

---

## இவ்வாரத்தில் பார்ப்பனீயத்தை ஒழித்த வீரர்கள்.

ஸ்ரீமான்கள்

சங்கர வீரபத்ர பிள்ளை,
திருநெல்வேலி.

ப. கருப்பஸாமி பண்டிதர்,
கோயமுத்தூர்.

சீர்காழி சின்னப்ப காடவாராயர்,
சாக்கோட்டை.

வி. நாராயணசாமி நாயடு,
சாக்கோட்டை.

சு. அண்ணாமலை வாணதிரியர்,
சாக்கோட்டை.

---

## மண்ணுலகை நீத்தார்.

ஈரோடு மு. சோம. பேங்க் ஏஜண்டு திருவாளர் ஆவுடையப்ப முதலியார் அவர்கள் விரும்பிய வண்ணம் இங்கே வந்திருந்த பாபவிநாச ஸ்ரீ கணபதி மந்திரம் மடாலயத் தலைவர் வேலப்ப சுவாமிகள் சென்ற கார்த்திகை மாதம் 24-தேதி இவவூரில் மண்ணுலகை நீத்தார்.

மாப்பாலத்துக் கருகிலுள்ள தோட்டத்திலே சமாதில் அடக்கம் செய்யப்பட்டார். கல்வியும் ஒழுக்கமும் பிறவுயிர்க்கிரக்கமும் ஒருங்கே யமையப் பெற்ற சுவாமிகளை இழந்தமைபற்றிச் சைவத்தமிழுலகம் பெரிதும் கவலை யுறுகின்றது.

திருவுடைய பிள்ளை,
மு. சோம. பாங்க், ஈரோடு.

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

கிடக்கின்றோம். பழைய வழக்மம் பழைய வழக்கம் என்று சொல்லிக் கொண்டுதான் இருக்கவேண்டுமா அல்லது இந்நிலையிருந்து திருந்தக்கூடாதா. நம் முன்னோர்கள் செய்துவந்த எத்தனையோ நல்ல பழக்கங்களை நாம் கைவிட்டுவிட வில்லையா? அதேபோல காலத்திற்கேற்ற பழக்க வழக்கங்களையடைந்து சீர்திருந்தி மேம்பாடடையக்கூடாதா என்பதை யோசித்துப் பாருங்கள். முன்னாட்களில் நாம் ஏமாறுவதற்குத் தகுந்தபடியிருந்த வசதிகளில் அதாவது நாம படிக்கவே கூடாது என்று பார்ப்பனர்கள் ஏற்படுத்திய கொடுமைகளால் குருட்டுப் பழக்கத்தி லீடுபட்டிருந்து வந்திருந்தாலும், இக்கால உலக நிலையையுணர்ந்தாயினும் நாம் நம்மை சீர்திருத்திக்கொள்ளக் கூடாதா வென்றுதான் நான் கேட்கிறேன் எனவே நாம் அடிமைப் பட்டிருப்பது முக்கியமாய் மதத்தின் பெயரால்தான் ஆகையால் அதைப்பற்றியும் நாம் ஆராயவேண்டும். மதம் என்பது மக்களின் வாழ்விற்கும் அன்புக்கும் பரோபகாரத்திற்கும் காலத்தின் நிலைமைக்கும் அறிவுக்கும் தேசஷ்ண ஸ்திதிக்கும் தக்கதான கொள்கைகள். அக்கொள்கைகளைப் பற்றி வாழ்க்கையில் இன்பம் என்னும் முக்தியடைய ஏற்பட்டதே யல்லாமல் வேறலல. நமது மதம் என்பது அனுஷ்டானததிலிவ்வாறிருக்கின்றதா? இன்னும் முக்கியமாகவுள்ள கிறிஸ்துவ மதம், முகமமதிய மதம், புத்த மதம், இந்து மதம் ஆகிய நான்கில் இந்து மதம் என்பது தவிர வேறெதுவும் கீழான நிலையில் இல்லை. நம்மைத் தவிர மற்ற மதஸ்தரெல்லாம் தங்கள் தேசத்தை ஆளுவதுடன் பிற தேசங்களையும் ஆண்டு வருகின்றார்கள். அப்படியிருக்க நாமோ ஆயிரக்கணக்கான வருஷங்களாக அநேகருக்கு அடிமையாயிருக்கின்றோம். ஏன்? நமது மதமென்பது நம்மை அடிமையாக்க உதவி புரிகிறது. காரணம், அது பொய்யாகவும் புரட்டாகவும், அர்த்தமற்றதாகவும் இருககிறது. நமது மதத்திறகு பெயராகவுள்ள இந்து என்ற வார்த்தை நமது தேச பாஷைகள் எதிலும் இல்லவே இல்லை, ஆராய்ச்சிக்காரர்கள் இந்து என்ற வார்த்தை பாரசிக பாஷையில் திருடர்கள் என்று பொருள்படுவதாக இருககிறது என்று சொல்கிறார்கள். சிலர் சிந்து என்ற பதம் இந்து என்பதாக மாறிற்று என்றும், அது நாட்டைக்குறித்து என்றும் மதத்தைக் குறித்தல்லவென்றும் கூறுகின்றார்கள். அதுவே தான் நம் நாட்டுக்கு இந்தியா என்ற பெயரைக் கொடுத்தது. இந்து என்பது ஒரு இடத்தைக் குறிப்பதே யல்லாமல் கொளகைகள் கொண்ட எந்த மதத்தையும் குறிககாது. இது சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் முடிவாகும். தவிரவும் இலககண இலக்கிய சாத்திரங்கள் முதலானவைகளிலும இந்து என்கின்ற வார்தவை காணப்படவே இல்லை. பின் இது என்னவென்று பார்த்தால் ஆதாரமற்றதாகவே காணப்படுகிறது. தவிர எந்த இந்துவும் தன் மதம் என்று கூடப்படும் இந்து மதத்தின் காலம், தலைவர், கொள்கை ஆகிய எதுவும் கூற முடியவே முடியாது. சமீப காலத்தில் ஏற்பட்டதான கிருஸ்தவ மதம், மகமதிய மதம், புத்த மதம் ஆகிய மதங்களைச் சேர்ந்தவர்கள், தங்கள் மதத்தைப் பற்றிய சகல விபரங்களையும் தாராளமாக சொல்லக்கூடிய நிலைமையிருக்கின்றார்கள். நமது மதம் கோடிக்கணக்கான வருஷங்களுக்கு மேம்பட்டதாகக் கூறுகின்றோம் ஆனால் விபரம் ஒன்றும் தெரியாது. நமக்கு எவ்வளவோ பினபு ஏற்பட்டதாக நம்மால் கூறப்படும் எல்லா மதத்தினரும் கல்வி, ஆராய்ச்சி, பொருளாதார நிலைமை முதலிய பலவற்றிலும் முற்போக்குடன் உன்னத நிலையில் இருக்கிறார்கள். நமது மதத்தில் 100-க்கு 5 பேருக்கு மேல் படித்தவர்களில்லை. பிறமதங்களில் 100-க்கு 90 பேரிருக்கின்றார்கள். மதத்திற்காக இதர மதஸ்தாகள் தஙகள் தங்கள் மதப் பிரசாரம் செய்யும் பொழுது, நம்மதத் தலைவர்கள் நம் பணங்களைக் கோடிக்கணக்காய் வாங்கி தின்றுகொண்டு எத்தகைய பிரசாரமும் இல்லாமல் சாப்பிட்டுக்கொண்டு இருப்பதுடன் நமது மதத்தவர்களை கோடிக் கணக்காக இதர மதங்களில் சேர இடங்கொடுத்து வருகின்றார்கள். நம்மத நூல்களை நம்மதத்தை சேர்ந்தவர்கள் படிக்கக கூடாதென்று கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். இதர மதக்காரர்கள் தங்கள் மதச் சம்மதிகளை தாராளமாக அச்சிட்டு வழங்குகின்றார்கள். பிற மதஸ்தர்கள் ஏழைகளுக்கு உபகாரங்களைச் செய்யும் பொழுது, நாம் தீண்டாதார்களென்று கோடிக்கணக்கான ஏழை மககளை ஒதுக்கி வைத்து கஷ்டப் படுத்துகின்றோம். மத வழிபாட்டிலும் நாம் வீணாக குருக்களுக்கும் புரோகிதர்களுக்கும் கொடுத்து வறுமைப் படுகின்றோம், பிற மதங்களில் அவ்வாறில்லை. மதத்தின் பெயரால் நாம செய்யும் சகல செலவுகளும் ஒரு வகுப்பாருக்கு ஜீவாதாரமாக முடிவதல்லாமல் அதைக் கொண்டு அவர்கள நம்மை இழிவாக நடத்தி வரவும் இடங்கொடுத்து வருகின்றது. இதர மதக்காரர்கள் சகல சுதந்திரங்களும் மக்களுக்கு கொடுக்கும் பொழுது நாம ஒருவர் உயர்வு என்றும் மற்றவர்கள் தாழ்வு என்றும், ஒருவரைப் பார்க்கக் கூடாதென்றும், ஒருவரைத்தீண்டக்கூடாதென்றும சொல்லுகிறோம். இது தான் இந்து மதமாக இருக்கிறது. ஒரு வகுப்புக்கு உயர்வையும் மற்றவர்களுக்கு அடிமைத் தனத்தையும் கொடுப்பது தான் நமது மதமாக வழங்கப்படுகின்றது. முஸ்லீம், கிருஸ்தவர் பௌததர் போன்றவர்களைப் போல நமக்கு ஒற்றுமையிருக்கின்றதா? அத்தகைய ஒற்றுமை நமது மதம் கற்பிக்கின்றதா? ஒரு மதத்திற்குள்ளாகவே, ஆயிரம ஜாதி, பதினாயிரம வகுப்பு, லட்சம் தெய்வம் என்பதாக மேலும் மேலும் பிரிவினையாகவே ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் நூல்களாகிய நமது சாத்திரங்களில் இந்த வித்தியாசங்களுக்கு ஏதேனும் ஆதாரமுண்டா? இடையில புகுத்தப்பட்ட இந்த பேத வழக்கத்தை நாமேன் அனுஷ்டிக்கவேண்டும்? பிராமணர் உயர்வு என்றும மற்றவர் தாழ்வு என்றும் நாம் ஏன் கொள்ளவேண்டும்? சகல அக்கிரமங்களைச் செய்தலும் ஒரு பிராமணன் உயர்வு என்றும் எவ்வளவு தூய வழக்கமும் அறிவுமுள்ளவனாகயிருந்தாலும் ஏனையோர் தாழ்வு என்றும் கொள்வதுதானா நியாயம்? தீண்டாதவர்கள் என்று ஒதுக்கி வைத்துக் கட்டுப்பாடு செய்து விட்டு அவர்கள் சுசீலமாக இல்லையென்று சொல்வதில் என்ன அர்த்தம்? அவர்கள் மாடுதின்கிறார்கள் என்று சொல்வதும் விந்தை தான்? மாடு தின்னும் வெள்ளைக்காரர்களுக்கு அடிமையாய் இருக்கும் பொழுது நமது தேசத்தில் பிறந்த இவர்களை அதற்காக நாம் ஏன் இவ்வளவு கொடுமையாக நடத்தவேண்டும். இது நமது மதம் என்பதின் குற்றமல்லவா? இப்படியெல்லாம் செய்வதால் தானே நமது மக்கள் எல்லோரும் இதர மதங்களில் சேர்ந்து கொண்டு வருகின்றார்கள். திருவாங்கூர் ராஜியத்தில் சுமார் 40 லட்சம் ஜனங்களென்று கணக்கிருக்கும் பொழுது இப்பொழுதுள்ள ஜனக் கணிதக்கணக்குப்படி 16 லட்சம் கிறிஸ்தவர்களும், சுமார் 4 லட்சம் முகம்மதியர்களுமாக சுமார் 20 லட்சம் ஜனங்கள் அன்னிய மதத்திலிறங்கியிருக்கின்றனர். பாக்கியுள்ள 20 லட்சத்திலும் சுமார் 12 லட்சம் ஜனங்கள் தீண்டாதவர்களாக இருக்கின்றனர்- இவ்வாறு நிலைமையானதற்கு நம் மதக் கொடுமை தான் காரணம். ஆகவே அவைகளை அடியுடன் ஒழித்தால் தான் நாம் சுகப்படுவோம். பிராமணர்களைப்போல் மதக் கட்டுப்பாடுகளைவற்புறுத்தும்பெயர்வழிகளும், இதாஜாதிகளும் இல்லாமலில்லை அவர்களையும்நாம்கண்டிக்கவேண்டியதுதான். ஆனால் பார்ப்பனர்கள்தான் இவைகளுக்குக் காரணமாகையாலும் அவர்கள் நம் நாட்டுக்கு வந்தபின்புதான் இவ்வாறான மூடப் பழக்கங்களெல்லாம் அவர்களால் ஏற்பட்டதாகையாலும் அவர்களைத் தான் முதலில் குறை கூறவேண்டியிருக்கின்றது. இவர்கள் நிலைக்கவைத்த மதம், ஆசாரம் முதலியவைகளை நாம் முதலில ஒழித்தால் தான் நமக்கு சுயமரியாதையும் அதன் மூலம் சுயராஜ்யமும் கிடைக்கும். இன்னும் சடங்குகளின் பெயரால் நாம் பிராமணருக்குக் கொடுப்பதுதான் மோட்சம் என்று நினைத்து ஏராளமான பணத்தைச் செலவிடுகிறோம். நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பதை ஏழை கட்கும் அங்கஹீனர்களுக்கும் கஷ்டப்பட முடியாதவர்களுக்கும் உதவாமல் சோம்பேறிகளாகிய இவர்களுக்கா தர்மம் செய்வது. சற்று யோசித்து இதில் ஏதேனும் புண்ய மிருப்பதாகப்படுகின்றதா என்று பாருங்கள். இதெல்லாம் அறிவீனத்தையும் நமது சுயமரியாதை இன்மையையுமே காட்டுகின்றது. தருமம் செய்யவேண்டியது அவசியம்தான் ஆனால் தகுதியைக் கருதி நாம அதை நடத்தவேண்டும். அவ்வகையில் நாம் நடந்து வந்தால் தான் நமக்கு கதிமோட்சம் உண்டு. ஆகவே சகோதரர்களே! இந்த மூட நம்பிக்கைகளையெல்லாம் உதறித் தள்ளி நீங்கள் சுயமரியாதைக்குப் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஒரு நிருப.

# நந்தனர் சரித்திரம். மநு நீதிக்கு அண்ணன்.

இச்சரித்திரத்திலுள்ள முக்கிய தாத்பரியம், மனிதர்களில் உயர்வு தாழ்வு உண்டு என்றும், அதிலும் தீண்டப் படாதவர்கள் உண்டு என்றும், பிராமணர்கள் தான் கடவுளின் பக்கத்தில் இருக்க யோக்கியதை உடையவர்கள் என்றும், நாங்கள் கடவுளை தரிசிக்க வேண்டுமானால் நெருப்பில் இறங்கி குளித்துவிட்டுத்தான் வரவேண்டுமென்றும் ஆதியிலிருந்து நாங்கள் சுதந்தர நாகரீகமும் சுய புத்தியும் இல்லாதவர்கள் என்றும் இன்னும் பல இழிவையே காட்டுகிறது.

இதில் எங்களை இழிவாக எழுதியிருக்கும் ஒவ்வொரு விஷயங்களையும் ஊன்றிப்பார்த்தால் எங்கள் மனம் பதைக்கிறது.

அவைகளில் சிலவற்றை இங்கு கூறுவோம்.

1. நந்தனர் இருந்த ஆதனூர் தெருவில் துர்நாற்றம் வீசுமென்றும் நாய்கள் குரைத்துத் திரியுமென்றும் எலும்புகள் குவிந்து கிடக்குமென்றும் ஆண்களும் பெண்களும் எந்நேரமும் குடித்து விட்டுச் சண்டை போட்டுக் கூச்சலிடுவார்கள் என்றும் வேதியர்களுக்கு நந்தனர் குடும்பங்கள் பரம்பரையாக அடிமையென்று முறிச்சீட்டு எழுதிகொடுத்திருந்ததாகவும் எழுதியிருக்கிறது

அக்காலத்தில் இந்நாட்டிற்கு நாங்களே பழங்குடி மக்கள் என்றும் உன்னத நாகரீகம் ஒழுக்கம் முதலியவைகளில் சிறந்து விளங்கியதாகவும் அரசாட்சி புரிந்ததாகவும் மற்றவர்களெல்லாம் எங்கள் நாட்டிற் குடியேறி பிழைக்க வந்து எங்களைக்கொண்டு கற்றுக்கொண்டதாகவும் எங்கள் சரித்திரங்கள் நிரூபித்திருக்க இப்படி எங்களை வேண்டுமென்றே இழிவாக எழுதி வைத்துக்கொண்டிருப்பது முற்றிலும் பொய்யும் அக்கிரமுமே யாகும்.

2, பெரிய தனக்காரக் கிழவனுக்கு நந்தனர் விபூதிபோட்டு மந்திரம் ஓதியவுடனே ஞானம் பிறந்து விட்டதாக எழுதியிருக்கிறது.

பெரிய பெரிய தவசிரேஷ்டர்கள் என்பேர்களெல்லாம் அநேக வருஷ காலமாக தபசு செய்துகொண்டிருந்தும் ஞானம் பிறக்காமல் இருந்திருக்கிறார்கள் என்றால் பெரிய கிழவனுக்கு சாம்பல் பரிசம்பட்ட உடனே ஞானம் பிறந்து விட்டது என்பது ஏமாற்றும் தந்திரமல்லவா.

3. நந்தனர் சிதம்பரம் போய் குளிப்பாட்டி அர்ச்சகர்களால் யாகாக்னியில் மூழ்கவைத்தவுடன் பழைய பறையன் போய் புதுப்பிராமண சரீரத்துடன் வெளி வந்த பின் தான் முத்தியடைந்தார் என்று எழுதியிருக்கிறது. எனவே எங்களில் நெருப்பில் முழுகாதவர்களுக்கு முக்தி இல்லை என்று தானே முடிவு ஏற்படுகிறது.

சகல ஜீவன்களுக்கும் தந்தையாகிய கடவுள் பறையன் தேகத்தோடே முக்திகொடுக்காமல் பார்ப்பன வேடம் பூண்ட பிறகு தான் முக்தி கொடுத்திருப்பார் என்பதை சிறுபிள்ளைகள் தான் நம்புமா?—

இவை போன்ற அநேக பாட்டுகளும் ஆபாசங்களும் இச்சரித்திரத்தில் நிறம்பிக்கிடக்கின்றன. ஆகையால் மனு தர்ம சாஸ்திரத்தைச் சுட்டுக் கடலில் கலக்குவது போல் இம்மாதிரி ஒருவருக்கொரு நீதியாக எழுதியுள்ள புஸ்தகங்கள் ஒவ்வொன்றையும் சுட்டுச் சாம்பலாக்க வேண்டுமென்றும் இனிமேல் இவைகளை நாடகமாக நடிக்காமலும் காலக்ஷேபமாக படிக்காமலும் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படிக்கில்லாதவரையில் சர்க்காராவது அக்கரை எடுத்து இம்மாதிரி ஆபாசங்களை பறிமுதல் செய்து தடை உத்திரவு போடவேணுமாய் பிரார்த்திக்கிறேன் என்று மாப்பரை தாலூகா ஆதிதிராவிட சபை காரியதரிசி கோக்களை ஸ்ரீமான் எஸ். கந்தசாமி எழுதுகிறார்.

---

# சுயமரியாதை உதயம்.

## பார்ப்பனர் எதிர்ப்பிரசாரம்.

பார்ப்பனர்கள் தமது மனைவி மக்கள் உறவினரெல்லாம் யாதொரு தேகப் பிரயாசையுமின்றி உண்டு உடுத்து சுகித்து வாழ பல வேத சாஸ்திர புராணங்களை எழுதிவைத்து இவைகள் கடவுளால் போதிக்கப்பட்டவையென்று பாமர மக்களிடம் ஏமாற்றி பணம்பறித்து வருகின்றனர் என்பது உலகறிந்த விஷயம் பார்ப்பனரல்லாத மக்களில் ஏமாறுகிறவர்கள் இருக்கும் வரையிலும் இந்த ஏமாற்றும் பார்ப்பனர்கள் இருந்தே தீருவார்கள். இதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் ஒரு தேசம் அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் தேசமக்களுக்கு முதலாவது சுயமரியாதை உணர்ச்சி உண்டாக வேண்டும். நமது இந்தியாவுக்கு இப்போது வேண்டியது சுயமரியாதையே. நமக்கு இப்போது சுயராஜ்யம் வேண்டியதில்லை. சுயமரியாதையை இழந்திருக்கிற இந்தியாவுக்கு சுயராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் இருக்க முடியாது. இந்தியாவில் ஆங்கில ஆட்சிக்கு முன்பு சுயராஜ்யமே இருந்துவந்தது. அந்தக் காலத்தில் நமக்கு சுயமரியாதை உணர்ச்சி இல்லா திருந்ததினாலேதான் நமது சுயராஜ்யம் நமது கையைவிட்டுப் போய் நாம் அன்னியருக்கு அடிமைப்பட நேர்ந்தது. இந்தியாவில் முகம்மதியர் படையெடுத்து வரும் முன்பே இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி குன்றத் தலைப்பட்டு விட்டது. ஆகவே பல காலங்களில் பல அன்னிய ஆட்சிக்கு நாம் அடிமைப்பட்டு வந்திருக்கிறோம்.

நம்மையாளும் ஆங்கிலேயர்களும் ஒரு காலத்தில் சுயமரியாதை யற்றவர்களா யிருந்தார்கள். அப்போது புரோகித மதம் அந்த நாட்டில் தலைவிரி கோலமாய் நின்று தாண்டவமாடினதுண்டு. ஆகவே மக்களில் பெரும்பான்மையோரும் அடிமை வாழ்வை நடத்தி வந்தார்கள். இந்த காலங்களில்தான் அன்னியர்கள் இங்கிலாந்தை ஆண்டு வந்ததாக சரித்திர மூலமாக அறிகிறோம். சமீப காலத்தில் துருக்கியில் நடந்துவரும் நிகழ்ச்சியை கவனியுங்கள். அங்கே துருக்கி வாலிபர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டானதும் புரோகித மதத்தை வெறுக்க ஆரம்பித்தார்கள். நல்லவேளையாக சுயமரியாதை வீரர்களுக்குத் தலைவராக கமால் பாட்சாவும் வந்தமர்ந்தார். துருக்கியின் தற்கால பெருமைக்கு அவர்களது சுயமரியாதை காரணமென்பதை அறிவாளிகள் அறிவர்.

ஆனால் இந்தியாவில் தற்போதிருக்கும் நமது நிலைமையைக் கவனிக்கும்போது நமது மனம் பதைபதைக்கிறது. அநேக கோடி மக்கள் நாய் பன்றி முதலிய மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்படுகின்றனர். தாம் வெட்டின கிணற்றில் ஊறும் தண்ணீரைமொண்டு குடியாதபடி தடைப்படுத்தப்பட்ட மக்கள் பலகோடிகள், தாம் கட்டின கோவிலில் சென்று சுவாமி தரிசனம் செய்யமுடியாதபடி யிருக்கும் மக்கள் பல கோடிகள், புலி பாம்பு முதலிய கொடிய பிராணிகள் நடமாடும் பாதைகளில் கூட நடக்கவொட்டாமல் தடைப்படுத்தப்பட்ட மக்கள் பல கோடிகள். இவ்விதமான அலங்கோலமானதும் மானங்கெட்டதுமான காட்சி பூலோகத்தில் இந்தியாவைத் தவிர வேறெந்த நாட்டிலும் காணமுடியாது. இவ்விழிவைத் தொலைக்கவே இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு புத்தர் பெருமான் அவதரித்தார். இந்த அவதார மூர்த்தியின் உழைப்பால் இந்தியாவில் சில நூற்றாண்டுகள் ஜாதிக் கொடுமைகளும் புரோகிதச் சூழ்ச்சிகளும் குறைந்திருந்தன. ஆனால் இப்போது அவைகள் பழயபடி ஆரம்பித்துவிட்டன. ஐயாயிரம் ஆறாயிரம் சம்பளம் வாங்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் வருணாசிரம தர்மம் புரோகிதச் சடங்கு முதலியவைகளை பிரசாரஞ் செய்யப் புறப்பட்டு விட்டனர். ஸ்ரீ காந்தியை ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர். இவைகளை நடத்துவிக்கும் பார்ப்பனர்கள் யாதாமொரு நோக்கமில்லாமல் செய்யவில்லை யென்பதை நாமறிவோம். இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டாய்விட்டால் இப்போது நடந்துவரும் வருணாசிரம அதர்மம், புரோகித சூழ்ச்சி. பகற்கொள்ளை முதலியவைகளை நடத்த இடமில்லாமல் போய்விடுமே யென்பதை பார்ப்பனர்கள் அறிவார்கள். ஆகையினாலேதான், பார்ப்பனர்கள் நமது சுயமரியாதை பிரசாரத்துக்கு எதிர் பிரசாரஞ்செய்து வருகிறார்கள். நல்லவேளையாக சுயமரியாதை வீரர்களுக்குத் தலைவராக திரு நாயக்கரவர்கள் நமக்கு வந்திருக்கிறார்கள். நமது நாயக்கர் அவர்களுக்கு இந்த சுயமரியாதைப் போரை வெற்றியுடன் முடிப்பதற்கு வேண்டிய ஆற்றலை கடவுள் அளிப்பாராக என்று 'திராவிடனில்' ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

# “தேசபக்தனுக்கு”

சென்ற 30—10—26ல் சுப்பிரமணிய அய்யர் என்ற ஒருவர் “தேசபக்தன்” பத்திரிகைக்கு சந்தா வசூலிக்க வந்திருப்பதாகச் சொல்லி சிங்கப்பூரில் திருவாளர் O. D. R. தியாகராஜ செட்டியாரிடமிருந்து 11 வெள்ளி பெற்றுக் கொண்டு ரசீது கொடுத்து விட்டு போனதாகவும், மூன்று பத்திரிகை மட்டும் அனுப்பினதாகவும், பின்னர் எத்தனையோ கடிதமெழுதியும் பத்திரிகையாவது பதிலாவது பண வாபீசாவது அனுப்பவில்லையென்றும் பலமாகக் கண்டித்து ஒரு வியாசம் எழுதி அதைப் பிரசுரிக்கும்படி நம்மைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் இதே போன்று சுமார் ஒரு மாதத்திற்கு முன் “மலாய் நாடு” என்ற புனைப்பெயருடன் ஒரு மலேயா நாட்டு வாசி “கொழும்பு தேச பக்தன் எங்கே” என்ற தலைப்பின் கீழ் ஒரு வியாசம் பிரசுரித்திருக்கின்றார். இவைகள் ஷை “தேச பக்தன்” பத்திரிகை ஒன்றை மட்டுமல்லாமல் எல்லா பத்திரிகைகளின் யோக்கியாம்சத்தையும் பாதிக்கக் கூடியனவாகையால், “தேச பக்தன்” பத்திராதிபர் உடனே ஷை புகார்களுக்கு தக்க சமாதானம் எழுதுவார் என்று எதிர் பார்த்து சிங்கப்பூர் வியாசத்தை இப்பொழுது பிரசுரிக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறோம்.

## கனம் 'குடி அரசு' பத்திராதிபர் அவர்கட்கு,

ஐயா,

தாங்கள் தற்காலம் இந்து கோவில்களில் நடக்கும் அநீதிகளையும், மதத்தைக்காரணமாகக் கொண்டு நடக்கும் வியபசாரத்தையும் கண்டித்து தகுந்தவாறு தங்கள் பத்திரிகையில் பிரசுரித்திருக்க, இந்த ஊரில் நேற்று நடந்த ஒரு சம்பவம் எங்கள் எல்லோரையும் பிரமிக்கச் செய்கிறது.

இந்த ஊர்த் தமிழ்ப்பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒருவர் 'வடிவீசுவரம் திருத்தொண்டர் குழாம்' என்று அநேக வாலிபர்களைக் கூட்டி, சமயத்தைப்பற்றி வேண்டிய பிரசங்கங்கள் செய்து வருவதும், தங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறோம். என்றும் போலவே, நேற்றும் (8—12—27) நாகர் கோவில் அட்மாசி மடத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கடவுள் நிலை, பக்தியுண்டாகும் வழிகள் முதலியவற்றைக் குறித்து மிகவும் அருமையான சொற்பொழிவுகள் அன்னார்தான் நடத்தினர். எல்லோர் மனதும் உண்மையான பத்தியில் ஈடுபட்டு இருந்தது. ஆனல் பக்தி பிரசங்கம் முடிந்ததும் ஒரு விலை மாதின் சங்கீதக்கச்சேரி ஒன்று நடைபெற்றது. முன்னிலும் பதின் மடங்கு ஆட்கள் கூடினர். பக்தியிலிருந்து அடுத்தபடி, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு ஸ்திரீ தருமங்களையும் துறந்த ஒரு பெண்ணின் ராகத்தொனியில் தலையசைத்து அவள் முகதரிசனத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விடுவது தானு? பாடிய பாட்டுக்களோ தேவாரப்பாக்கள்கூட அல்ல; வெறும சப்த சுரங்கள். அடியேன் இது கண்டதும், ஏதாவது எடுத்து ஜனங்களுக்குச் சொல்லலாம் என்று எண்ணினேன். ஆனல் பிரசங்கம் செய்யும் வன்மையில்லாததால் விட்டொழிந்தேன். இது தானே பக்தியை உண்டு பண்ணல்' சற்று முன் மழைபோல் பொழிந்த உபாத்தியாயரவர்களும தலையசைத்து விட்டாரே! என்ன அநியாயம்!. ஆதலால், தாங்கள், தங்கள் பத்திரிகை வாயிலாக இனியாவது இம்மாதிரி நடக்காமல் இருக்கத்தக்க ஒரு பொருள் சொல்லாவிடின் நூற்றுக்கணக்கான வாலிபர்கள், இம்மாதிரி பக்தியின் பேரால் தங்கள் ஒழுக்கங்களை யிழப்பரென்பது நிச்சயம்.

கண்டு சகியாதான்,
நாகர் கோவில், தென் திருவாங்கூர்.

## "இந்து நேசன்."

"இந்து நேசன்" என்னும் பத்திரிகையின் இவ்வருஷ அனுபந்தம் வரப்பெற்றோம். அது அழகான காகிதத்தில் பார்ப்பனமதப் பிரசாரப் படங்களும் கதைகளும் நிரம்பியதாய் இருக்கிறது. வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம். பிரதி 1-க்கு விலை ரூ. 1.

விலாசம் :—

"இந்துநேசன்" ஆபீஸ், மதுரை.

## தஞ்சை கோவாபரேடிவ் விவசாய சங்க முதலாவதாண்டு அறிக்கை.

தஞ்சாவூர் கோவாபரேடிவ் விவசாய சங்கத்தின் முதலாவதாண்டு அறிக்கையும், தஞ்சை நில அடமான பாங்கியின் முதலாவதாண்டு அறிக்கையும் வரப்பெற்றோம். ஷை சங்கமும் பாங்கியும், விவசாயத்தில் நூதன முறைகளைக்காண்பித்து விவசாய அறிவைப் பரவச்செய்தலும், குத்தகைக்கும் கிரயத்திற்கும் விவசாய நிலங்களை வாங்குதலும், அங்கத்தினர்களுக்கு வேண்டிய புது விதை, எரு, கருவிகள் வாங்கிக்கொடுத்தலும், நிலத்தின்பேரில் 20 வருட வாய்தாவுக்கு கடன் கொடுத்தலும், நிலத்தின் பேரிலுள்ள முன் அடமானங்களையும் பழய கடன்களையும் தீர்த்தலும், சிக்கனம், சுய உதவி, கூட்டுறவு முறைகளைப் புகட்டலும் ஆகிய பல அரிய நோக்கங்களைக் கொண்டு தஞ்சை விவசாயிகளின் நன்மைக்காக நடத்தப்பட்டு வருவன. இது சமயம் ரூபாய் 1,00,000 மூலதனம் கொண்டதாக அதாவது ரூபாய் 10 கொண்ட 10,000 பங்குகளையுடையதாகவும இன்னும் விரிவடையக்கூடியதாகவும், இதனல் பலர் பெரும் பலனடைந்திருப்பதாகவும் அறிக்கையின் மூலம் அறிகின்றோம். அமைச்சர் திருவாளர் ஐ. குமாரசாமி பிள்ளையவர்கள் அரிய முயற்சி போற்றத்தக்கது.

பங்கு, கடன், வேண்டுவோரும் மற்ற விபரம் அறிய விரும்புவோரும் சங்க அமைச்சர் அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

## தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம் நாகபட்டணம். வேண்டுகோள்.

தற்காலம் எங்களில் சுமார் 3000 தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்திலிருந்து விலகிக்கொள்ள வேறு வகையில்லாமல் பொது வேலை நிறுத்தப் பிரசாரம் செய்யவும் எங்களின் முன்னேற்றத்தைக் கருதி ஆரம்பிக்கப்பட போகும் "தொழிலாளி" பத்திரிக்கைக்கு நிதிசேர்க்கவும் எமதன்பர்களும் நமது சங்க அங்கத்தினர்களுமாகிய தோழர்கள் ஸ்ரீ மாணிக்கதாஸ், ஸ்ரீ சாமிவேல் பிள்ளை தென் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்வதால் பிரசாரத்திற்கு வேண்டிய உதவி செய்வதுடன் தங்களாலியன்ற பொருளுதவியும புரியும்படி பிரார்த்திக்கின்றேன்.

நாகபட்டணம் } தங்களன்புள்ள,
12—12—27. } D. கிருஷ்ணசாமி பிள்ளை,
தலைவன்.

## ஓர் வேண்டுகோள்.

ஸ்ரீமான் முத்துசாமி பிள்ளை யவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் 'திராவிடனுக்கும்' 'குடியரசுக்கும்' சந்தா சேர்க்கவருவதால் அவர்களுக்கு வேண்டிய ஆதரவளிக்க வேணுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம்.

## "குடி அரசு" நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிரூபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், இடது ஓரத்தில் ஒரு அங்குல இடம்(மார்ஜின்)விட்டு, வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனிப்பட்ட நபர்களைக்குறித்து அனுப்பப்படும் கண்டனங்களும் ஊர்வம்பு விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

சந்தாதாரர்கள் எழுதும் கடிதங்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் ரிஜிஸ்டர் நம்பரைச் சந்தா நெம்பராக நினைத்து அந்நெம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். சந்தா நம்பர் என்பது ஒவ்வொரு விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந் நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்படமாட்டாது.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தா காலாவதியடைவதற்கு முன அடுத்த வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்று எழுதாதவரை அடுத்த வருஷத்திற்கும் பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக்கொண்டதாகவே வைத்துக்கொண்டு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பியதாக ஏற்பட்ட வி. பி. யை கௌரவிக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

## திருவண்ணாமலை கிராம பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டு தேர்தல்.

12—12—27 காலை திருவண்ணாமலை கிராமச்சாவடியில் பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்கள் யாவரும் ஒன்றுகூடி. திருவாளர்பெரியார் வே. மு. சாமி செட்டியார் அவர்களை பிரசிடெண்டு ஸ்தானத்திற்கு போட்டி இன்றி யாவரும் ஏகமனதாக தேர்ந்தெடுத்தார்கள் என்று ஒரு நிரூபர் எழுதுகிறார்.

இனாம்! இனாம்!
சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்.
ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனாம்.
நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.
லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

இந்தியாவின் பூர்வீக மறை ஆராய்ச்சிக்குரிய சிறந்த நூல்கள்.
மதசீர்த்திருத்தக்காரர்களும் தமிழபிமானிகளும் அவசியம் பார்க்க வேண்டிய புத்தகங்கள்.

இந்திரர் தேச சரிதை— ஆரியர் நமது தேசத்தில் வந்து தேசத்தையும், மதத்தையும், மக்களையும், பாழ்படுத்தியதை விவரித்துள்ளது 0—8—0
விசேஷ சங்கைத்தெளிவு 100 அவசியமும் அருமையுமான சங்கைகளை விளக்கியுள்ளது 0—8—0
திருவள்ளுவர் உண்மை சரிதமும் அவரது மதமும் 0—2—0
திராவிடர் பண்டிகைகளின் விளக்கம் 0—2—0
திராவிடர் விவாகங்களின் விளக்கம் 0—2—6
கிராம தேவதையான அம்பிகையம்மனின் சரிதை 0—1—6
ஸ்ரீ கஜமுகனின் உண்மை சரித்திரம் 0—1—6
ஸ்ரீ முருகனின் உண்மை சரித்திரம் 0—1—6
அரிச்சந்திரனின் உண்மை சரித்திரம் 0—1—6
புத்த தருமோபதேச அநுஷ்டான நியமம் 0—1—0
வஜ்ஜிரசூசி என்னும் ஜாதி கண்டனம் 0—1—0
கந்தன் சரித்திர விளக்க வினு விடை 0—2—0
யதார்த்த வேஷ பிராமணர் வேதாந்த விபரம் 0—4—0
நூதன ஜாதிகளின் உற்பவ பீடிகை 0—4—0
கிகழ்காலத்திரங்கலும் பெருங்குறவஞ்சியும் 0—2—6
விபூதி விளக்க வொளியும் கபோலீசர் விபாமும் 0—0—6
பூர்வத்தமிழொளியாம் ஸ்ரீ புத்தாது ஆதி வேதம். தமிழில் இதைவிட சிறந்தநூல் வேறு கிடையாது கலிகோ பைண்டுசெய்த பெரிய புத்தகம் 3—0—0
புத்தமார்க்க வினு விடை 1 & 2 0—5—0
அசோக சரித்திரம் 0—4—0
வருணபேத விளக்கம் 0—4—0
ஸ்ரீ அம்பிகையம்மன் அருளிய திரிவாசகம் 0—6—0

ஸ்ரீ ஸித்தார்த்தா புத்தக சாலை
சாம்பியன் ரீப்ஸ்.போஸ்ட்
கோலார் கோல்ட் பீல்ட்.

Sri Siddhartha Book Depot
Champion Reefs P. O.
Kolar Gold Field S. I.



இனும்! இனும்
முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.




எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம்விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனு இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras,



# மிருத்யுஞ் ஜெய ஸம்ரக்ஷணீய வைத்தியசாலை, மாயவரம்.

இவ்வைத்தியசாலையில் மலையாளத்திலுள்ள சிறந்த மூலிகைகளைக் கொண்டு மேலான ஆயுர்வேத முறைபடிக்கு தயாரித்த மருந்துகளும், தயில தாரை, தக்ர தாரை, பழிச்சல், நவரக்கிழி, கஸ்யம், வஸ்தி, ஸ்நேகபானம், சிரோவஸ்தி, வமனம், ரேசனம் முதலிய ஆயுர்வேத முறைப்படிக்கு எல்லா சிகிச்சைகளும் செய்ய படிப்பும் அநுபோகமும் உள்ள ஓர் வைத்தியரும் எப்பொழுதும் தயாராயிருக்கிறார் ஆப்பிரேஷனைத்தவிர மற்றெல்லா வியாதிகளுக்கும் நேரிலும் கடிதமூலமாகவும் தீர விசாரித்து அறிந்து தக்க மருந்து கொண்டு சிகிச்சை செய்யப்படும். அதிக விபரம் அறிய ஆவலுள்ளவர்கள் கடிதம் மூலம் அறிந்து கொள்ளவும்.

முக்கியமான சில மருந்துகளின் விபரம்.

## அமிர்த சஞ்சீவி ரசாயனம்.

இது சகல வியாதிகளுக்கும் அமிர்சம் போன்ற தக்க கைகண்ட மருந்து. விசேஷமாய் காஸம்,, க்ஷயம், பிரமேகம் (நீர் ரோகம்) குன்மம், சூலை, குஷ்டம், ரணம், மேகநீர், சொரி, கிரந்தி, வெட்டை இவைகளுக்கும், ரெத்தம் குறைந்து இந்திரியம் நீத்துப்போய் இரவில் தூக்கமின்றி தவிப்பவர்கட்கும் இன்றியமையாதது.

விலை சேர் 1-க்கு ரூ. 4—0—0.

## காமகல்பக ரசாயனம்.

இது நித்யம் இரவில் சாப்பிட்டு பால் சாப்பிட்டால் சுக நித்திரையும் சம்போக சாமர்த்தியமும் உண்டாவதுடன் மனதிற்கு சந்தோஷத்தையும் தேகத்திற்கு பலத்தையும் கொடுக்கும். தவிர அஜீர்ணம் கிரகணி குன்மம், சூலை, பித்தவாயு, நீர் ரோகம், வெட்டை, காஸம், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கும் உத்தமமான மருந்து.

விலை சேர் 1-க்கு ரூ. 7—8—0.

இன்னும் உயர்ந்த தைல வகைகளும் தயாரில் இருக்கின்றன. எழுதி தெரிந்து கோள்ளவும்.

Dr. T. S. நாயர்,
M. S. வைத்தியசாலை, மாயவரம்.



## உறையூர் சரிகை அங்கவஸ்திரங்கள்.

:o:

சரிகைக்கு காரண்டி, உடை நயம்.

அசல் 100 நெம்பர் நூலில் சொந்த கைத்தறி நெசவு தினப்படி உபயோகத்திற்கு ஏற்றதாயும், நாகரீகமாகவும் உள்ள பட்டுக்கரை சரிகை முந்தி 2¾ அகலம் 5முழம் அங்கவஸ்திரங்கள், 1 நெ 1-க்கு ரூபாய் 2—2—0. 2 நெ. 2—6—0 3 நெ. 2—10—0. 4 நெ. 3—0—0. 5 நெ. 3—8—0. 6 நெ. சரிகை சி 1—14—0. 7 நெ. சாதா கம்பி 1—12—0. 200 நெ. ஷை அகலம் முழம் உள்ளது பட்டுக்கரை சரிகை முந்தி அங்கவஸ்திரம் 1க்கு ரூ 3—8—0 முதல் ரூ 6 வரையில் உண்டு. சரிகை கரை சரிகை முந்தி உள்ளது ரூ 6 முதல் 20, 25 வரையிலும் உண்டு. மற்றும் பேட்டகங்களும் 3 அகலம் ஜோடிகளும் உண்டு. ஆர்டர் செய்யும்போது கருப்பு, சிகப்பு கரை அல்லது முந்திகளில் சீர் இன்னது இருக்க வேண்டும் என்பதாக எழுதக் கோருகிறோம்.

N. B:- மலாய் நாட்டில் கமிஷனுக்கு ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதக் கோருகிறோம். வி. பி. தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.

விலாசம்:- மானேஜர்,
ஸ்ரீ சௌடாம்பிகா ஜவுளி வர்த்தகசாலை,
உறையூர் P. O. திருச்சி.


## "தண்டபாணி"

சேலம் ஜில்லா நாமக்கல்லிலிருந்து "தண்டபாணி" என்ற பெயர் கொண்ட ஓர் தமிழ் மாத சஞ்சிகை ஜனவரி மாதம் முதற்கொண்டு வெளியிட முயற்சி செய்து வருவதாக ஸ்ரீமான் P. S. வீரம செட்டியார் தெரிவிக்கிறார்.

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டுலட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்தும், இதைப்போன்ற அநேக புத்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால்தயார்செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், நிகரற்றதும், நற்சாட்சியும், ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும், சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாட்சிப் பத்திரம் வாங்கப் பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க்போட்டுள்ள




## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

வெளிவந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய்விட்டன. உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பதிப்பில் மிகவும்சிரமப்பட்டு அணுமுதல் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பலபோலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும் இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான் இதுதான்.

800 பக்கம் முழு காலிகோபயிண்டு விலை ரூபாய் 2 வி. பி. தபால் செலவு அணா 8

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

## டிடக்டாவ்ஸ்
அல்லது
## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவனை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் டை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம். ஜி. டி. மதராஸ்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி).

ல்லுமிறவனையே சார்ந்திருக்கிறார்கள். அவர்கள் வார்த்தைகளினாலே அநேக ராச்சியங்கள் கெட்ட கதைகளும் குடும்பங்களும் பிரத்தியட்சத்திலிருக்கின்றன. பெண்களுக்கும் பக்கத்திலிருந்து இதம் பேசுகிறவர்களிடம் மனமிறங்குமென்று சொல்லப்படுகிறது. கொடியோர் கன்னிகற்றானேயாக விருந்தாலும் பக்கத்திலுள்ளதை பற்றிப் படரும். அது போலவே மகாத்மா காந்தியவர்களும் பக்கத்திலிருப்பவர்களைப் பற்றி நிற்கிறார். இவருக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்து வரப்படாதென்று கருதித்தான் கனம் சக்லத்து வாலா அவர்களும் 'பிரயோசனமற்றதையும் அனுபோகத்திற்கு வாராததையும் சொல்லிக் கொண்டிருப்பதை விட்டு விடுங்கள்,' என்று மகாத்மாவிக்குச் சொன்னார்.

**மநு நீதி போன்ற அதர்ம நீதி உலகில் மற்றொன்றும் இல்லை.**

## கட்டி வெள்ளி நகைகள்

## இனும்! 1928-ஸு காலண்டர் இனும்!
### துப்புரவான வேலைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரணுக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையருக்களும், இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகைருக்களும், அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையருக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 கெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்

விலாசம்,

தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்

தந்தி விலாசம் "சராப்" சேலம்

சுறுப் & ஜவுளி வியாபாரம்
குகை, சேலம். (S. India)

## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

### ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய டை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

தி: கிருஷ்ணா ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்.

## பார்ப்பனீயம் ஒழிந்து சுயமரியாதை உதயமாயிற்று.

அருப்புக்கோட்டையில் சாலிய மகாஜனங்கள் வசிக்கும் இடங்களாகிய புளியம்பட்டி வேலாயுதபுரம் வெள்ளைக்கோட்டை என்ற மூன்று இடங்களிலும் நெசவுக்கு பாத்தோய்கின்ற நேரமாகிய காலையில் பஞ்சாங்கப் பார்ப்பானுக்கு பஞ்சாங்கம் வாசித்தபின் பாவு ஒன்றுக்கு காலணா கொடுத்துவருவது வழக்கமாக இருந்தது.

இப்போது வேலாயுதபுரத்தில் பாவு ஒன்றுக்கு காலணா கொடுப்பதை தவிர்த்து அத்தொகையை வசூலித்து சாலிய மகாஜன சங்கத்திற்கு சேர்க்கப்பட்டு வருகிறது. இது செய்தி மிகவும் பாராட்டத்தக்கது.

இதுபோலவே புளியம்பட்டி, வெள்ளைக்கோட்டை முதலான இடங்களிலிருக்கும் சாலிய மகாஜனங்கள் பார்ப்பன புரோகிதருக்கு பாவுக்கட்டணம் கொடுப்பதைத் தவிர்த்து அத்தொகையை வசூலித்து பொதுஜன ஊழியத்திற்கு உதவி வருவார்கள் என்பது நமது முழு நம்பிக்கை என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த

**இரகசிய புஸ்தகம் தயாராகிவிட்டது.**

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம். நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது: அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை என் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. ஒவ்வொரு தேசத்திலும் நாணம் எந்நிலைமையிலிருக்கிறது?
9. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
10. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
11. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
12. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
13. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
14. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
15. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
16. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
17. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
18. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
19. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
20. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
21. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
22. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
23. வாழ்க்கையில் முக்கியமாய் பெண்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள்.
24. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
25. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
26. கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
27. தம்மனோபாவனையின்படி ஆண், பெண் உற்பத்தி செய்து கொள்ளும் தன்மை.
28. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
29. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
30. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
31. சுகப்பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்கள். பிரசவித்த குழந்தையைப் பிரசவ காலத்தில் ரக்ஷிக்கும் கிரமம்.
32. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
33. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
34. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?
35. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.
36. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.
37. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள். ஏனென்றால் அங்கும் ஏமாற்றமடையாமல் இன்பங் காண்பதற்கு அநேக வழிகளுண்டு.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

முக்கிய குறிப்பு:—வெளி நாட்டார் கண்டிப்பாய் முன்பணம் அனுப்பவேண்டும்.

**வாஸன் புஸ்தகசாலை,**
**தபாற் பெட்டி நெ. 119**
**97. அன்னபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.**

அநேக ஏராளமான நற்சாட்சிகளும், தங்கமெடல்களும், ஏராளமான பரிசுகளும் பெற்று, டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதிகளை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தர தேவ ஔஷதங்கள். உலக மெங்கும் புகழ்ந்து கொண்டாடி வரப்படுகிறது.



டிரேட் மார்க்

## தாது புஷ்டிக்கு அசல் தங்க பற்பம்.

அதிக வயதாலும், பலஹீனத்தாலும், பலவித துர் அப்பியாசத்தாலும், சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைக் கெட்டிப்படுத்தி, சப்த தாதுக்களுக்கும் வலுக் கொடுத்து இல்வாழ்க்கையில் அதிக இன்பத்தைஉண்டு பண்ணி புத்திர சந்தானத்தைக் கொடுப்பதில்இதற்கு மிஞ்சிய ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். முதல் நெ. பற்பம் 50 நாள் மருந்து விலை ரூ 36 [2-ம் நெ. பற்பம் 50 நாள் மருந்து விலை ரூ 20.]அனுபானத்துக்கு மகா வில்வாதி லேகியம் 1 டின் விலை ரூபாய் 10. (தபால் செலவு பிரத்தியேகம்,)

## அசல் வெள்ளி பற்பம்.

(உத்திரவாதம்) நமது அசல் வெள்ளி பற்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை, நீரோடுஇந்திரியம் உடைந்து விழுதல், அதில் ஈ, எறும்பு மொய்த்தல். சிணுக்கிருமல், தும்மல் விழுதல், வெட்டை வாய்வு, இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், திரேகம் இளைத்து சதா ஜுரம்போல் சூடுதாங்கி யிருத்தல், கால், கை, கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவர்த்தியாகும். திரேகத்திற்கு நல்ல பலத்தையும் தாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டுபண்ணுவதில் இதற்கு நிகரான மருந்துகள் கிடையாது. இதை மதனகாமேஸ்வரி லேகிய அனுபானத்தில் வைத்துச் சாப்பிடவேண்டும். ஒரு மண்டலம் (48 நாள்) உபயோகிக்கக்கூடிய பற்பம் விலை ரூ 15 [அரை மண்டலம் 24 நாள்] உபயோகிக்கக்கூடிய பற்பம் விலை ரூபாய் 7—8—0, ஒரு மண்டல மதனகாமேஸ்வரி லேகியம் 2 டின் விலை ரூ 16—0—0 (தபால் சார்ஜ் பிரத்தியேகம்.)

## நீரழிவுக்கு அப்ரேக் செந்தூரம்.

வயது 40க்கு மேல் வாழ்க்கையிலுள்ள கருவி கரணங்கள் சற்று இளகும். அப்போது மூத்திரப்பை பலனற்று ஜனேந்திரியம் நீற்றுப் போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப் பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனை விட்டுவிட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரழிவு வியாதியினால் இறந்துபோகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக் செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரழிவினால் ஏற்படும் சகல கோளாறுகளையும் நிவர்த்தி செய்து நல்ல மேனியை உண்டுபண்ணி சந்தோஷத்தில் வைத்து வளர்த்தும். அதிமதுரப்பால் ரசாயனத்தில் சாப்பிடவேண்டும். 24 நாள் மருந்து [அனுபான ரஸாயனத்துடன்] விலை ரூ 16. தபால் செலவு வேறு

## தாளக பற்பம்.

நாட்பட்ட காசம், இருமல், க்ஷயம் சளி, கோழை, கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களை வெகுசீக்கிரத்தில் குணப்படுத்தும். முதல் நெ. பற்பம் புட்டி 1 க்கு விலை ரூ 7—0—0. அனுபானம் லேகியம், கண்டங்கத்தரி அல்லது தூதுவளை ரஸாயனம், 10 நாளைக்கு விலை ரூ. 3—8—0 தபால் செலவு வேறு.

நற்சாட்சி.— பழனி சற்குரு மகாதேவ ஸ்வாமிகள் சித்த ஆயுள் வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்யும் தங்கம், தாம்பரம், வெள்ளி, பவளம், முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 ௵ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினாலும் சுவாசத்தினாலும் கஷ்டப்பட்டும் அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் வெகு ஜல்தியில் சௌக்கியம் செய்து விட்டார். இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்வதில் மிகவும் சந்தோஷ முள்ளவனாயிருக்கிறேன். எல். கல்யாணராமய்யர், ரிடயர்டு தாசில்தார் அண்டு சிவகிரி திவான்.

## நாக பற்பம்.

மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை பெருமுறை மருந்து முதல் நெ. பற்பம் புட்டி 1 க்கு விலை ரூ 10. [தபால் செலவு வேறு]

நற்சாட்சி:— பழனி வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ வி. கோபால்சாமி அய்யர் சொல்வதை கவனியுங்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் "பழனி சதானந்த மெடிக்கல் ஹால்" ஸ்ரீமான் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள் தாம்பிர பற்பத்தாலும் மற்றும் அநேக பற்பமுறை, லேகியபோக்கு,செந்தூர வைப்பு, தைலதினுசு இவைகளால் பலவிதமான குஷ்டரோகங்களும் இன்னும் அநேகவிதமானரோகங்கள் சொஸ்தப்பட்டுவருவதும், ஆண்டிப்பட்டி ஜமீன்தார் ஸ்ரீமான் ஆர். எம்:சிடி. பேத்தாச்சி செட்டியார் அவர்கள் ,விசாகப்பட்டணம் மகாராணி அம்மை Ceylon Supreme Court Sir Kumarasami Mudalar Avl K. C. I: E. Ceylon ராமநாதா தத்துப் புத்திரர், கனகசபை மகாராஜா அவர்கள். சிவகிரி திவான் ஸ்ரீமான் கல்யாணராமய்யர் அவர்கள், பென்ஷன் தாசில்தார். காரத் தொழுவு (Land Lord) சுப்பம்மாள் இவர்களால் கொடுக்கப்பட்ட தங்க மெடல், மாகத மெடல் முதலியவைகள் பெற்றிருப்பது நான் நேரில் அறிந்த விஷயம். எவ்வித ரோகஸ்தரும் தாமதம் தாழ்வு அன்னியில் ஸ்வாமிகள் அவர்களிடம் குணம் பெற்றுக் கொள்ள விரும்பி என் அபிப்பிராயத்தை வெளியிடுகிறேன். 18—1—25 (ஒப்பம்) வி. கோபாலசாமி அய்யர் வக்கீல் பழனி.

நமது தாம்பர பற்பத்தின் விளம்பரத்தை அடுத்தவாரம் பிரசுரமாகும் பத்திரிகையில் பார்க்கவும். விவரமான கேடலாக்குக்கு எழுதுங்கள்.
மலாய் நாட்டிலுள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவும்.

# ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்.

சதானந்த மெடிகல் ஹால், பழனி, மதுரை ஜில்லா, தென்னிந்தியா.

தந்தி விலாசம்:— "சற்குரு" பழனி Tel.—address "Sarguru" Palni

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.